பக்கங்கள்:-பன்னிரண்டு

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | வைகாசி 28 | வியாழக்கிழமை | (10.06.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 174

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## ஆட்சியைக் காப்பாற்ற புதிய வியூகம்

# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிகளுடன் ஜனாதிபதி இன்று இரவு சந்திப்பு

## அரசுக்கு கைகொடுத்து உதவுங்கள் எனக் கேட்பார்

(நமது நிருபர்)

**தென்னிலங்கை அரசியலில் ஏற்பட்டிருக்கும் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில், எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தன்னுடன் பேச்சு நடத்தவருமாறு ஜனாதிபதி சந்திரிகா அழைத்துள்ளார்.**

**கூட்டமைப்புப் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனுக்கு இது தொடர்பான உத்தியோக பூர்வ அழைப்பை ஜனாதிபதி நேற்று விடுத்துள்ளார்.**

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பாராளுமன்றில் பொரும்பான்மையை நிருபிக்க முடியாமல் திணறிவருகிறது. பாராளுமன்றத்தின் சபாநாயகர் பதவியை கோட்டை விட்ட அரசாங்கம் தொடர்ந்தும் தனது பெரும்பான்மையை நிருபிக்க முடியாத நிலையில்-சிக்கலில் மாட்டியுள்ளது.

புதிய அரசாங்கம் பதவியேற்று நான்கு தடவைகள் பாராளுமன்றம கூடியபோதும் தனது பெரும்பான்மைப் பலத்தை அரசாங்கத்தால் நிருபிக்க முடியவில்லை. மேலும் பாராளுமன்ற அமர்வுகள் அனைத்தும் ஆமர்க்களமாக மாறிவருகின்றன. இந்நிலையில் ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள ஜனாதிபதி புதிய வியூகம் ஒன்றை வகுத்துள்ளார். இதற்கமையவே

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிஸ்ரலுடன் இளைஞர் இருவர் வாழைச்சேனையில் கைது

### துப்பாக்கி ரவை வைத்திருந்தவரும் கைதானார்

(மட்டக்களப்பு)

மட்டககளப்பு வாழைச்சேனைப் பகுதியில் ஆயுதங்களுடன் மூன்று இளைஞர்கள் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்குடா விநாயகபுரத்தில் பொலிஸாரும் இராணுவத்தினரும் கூட்டாக தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் ஆயுதங்களுடன் சென்று கொண்டிருந்த இளைஞர்கள் இருவரை பொலிஸார் கைது செய்தனர்.

இவர்களடமிருந்து 9 மி.மீ நவின ரகக் கைத்துப்பாக்கி ஒன்று, அதற்கான ரவைகள், கைக்குண்டு ஒன்று மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பன கைப்பற்றப்பட்டுள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## போராளியைப் பொலிஸார் தாக்கினர்

(வவுனியா)

வவுனியா புதுக்குளம் பிரதேச பொறுப்பாளர், வவுனியா போக்குவரத்துப் பொலிசாரால் தாக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் வவுனியா போர் நிறுத்த கண்காணிப்பு குழுவினருக்கு முறையிட்டுள்ளனர்.நேற்று மதியம் வவுனியா புதுக்குளம் பிரதேசப் பொறுப்பாளர் அழகரசன் வவுனியாவிலிருந்து பூந்தோட்டம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற போது வழி மறித்த போக்குவரத்து பொாலிசார் வாய்த் தகராறில் ஈடுபட்டு பின்னர் அவரைத் தாக்கியுள்ளனர்.

இதனைக் கண்ட ஒருவர் அரசியல்துறைக்கு தொலைபேசிமூலம் தெரிவித்துள்ளார். உடனடியாக அங்கு விரைந்த வவுனியா மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் ஞானவேலு, நகர பொறுப்பாளர் தர்மேந்திரா

(12ஆம் பக்கம் பார்க்க)

## கல்கிசைக் ஹோட்டலில் இருந்து ஆயுதங்களுடன் நால்வர் கைது

(கொழும்பு)

கல்கிசைப் பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இருந்து ஆயுதங்களுடன் நால்வரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களிடம் இருந்து இரண்டு துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட துப்பாக்கிகளில் ஒன்று அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவிலிருந்து காணாமற் போயிருந்ததாக திட்டமிட்ட கொலைகள் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் அல்விஸ் விஜயவர்த்தன தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட நான்கு பேரும் பலவேறு கொலை, கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மொறட்டுவப் பகுதியிலுள்ள பிரபல பாதாள உலகக் கோஷ்டித் தலைவர் ஒருவரின் கொலையுடன் இவர்களுக்கு நெருங்கிய தொடர்பு இருப்பதாக தெரியவந்துள்ளதாகவும் அவர்களிடமிருந்த துப்பாக்கி ஐந்து வருடங்களுக்கு முன்பு பாதுகாப்பு பிரிவிலிருந்து திருடப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ச)

## திருமலையில் ஹர்த்தால்

(திருகோணமலை)

ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன் கொல்லப்பட்டமை உட்பட கிழக்கில் இடம் பெற்ற படுகொலைகளுக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் திருகோணமலையில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனால் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் முற்றாகச் செயலிழந்தன. பாடசாலைகள் திறக்கப்பட்ட போதும் மாணவர்கள் எவரும் பாடசாலைகளுக்குச் செல்லவில்லை. வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டதனால் வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் முடங்கியிருந்தன. போக்குவரத்து சேவைகளும் இடம் பெறவில்லை. இதனால் வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. (த-10)

## தரம்- 5 புலமைப் பரிசில் பரீட்சை ஓகஸ்ட் 15இல்

(கொழும்பு)

தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி நடைபெறுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மகிந்தவிஜயசிறி தெரிவித்துள்ளார்.

பரீட்சை வினாத்தாள்கள் தயாரிக்கும் பணி தற்போது முடிவடையும் தறுவாயில் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இப் பரீட்சையில் சித்தியடையும மாணவர்களுக்கு சிறந்த பாடசாலைகள் ஒதுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (உ-60,10)

## நாளை நடைபெற இருந்த பேரணி 17ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டது

### அன்றைய தினம் பொது மக்களை அணி திரள அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மக்களின் இயல்பு வாழ்க்கையை வலியுறுத்தும் நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நாளை மேற்கொள்ளப்படவிருந்த கண்டனப் பேரணி எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

பேரணியை விரிவாக்கும் நோக்குடனேயே அது பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர் வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள கண்டனப் பேரணியில் மக்கள் உணர்வு பூர்வமாகப் பங்கெடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியச் செயலாளர் ப.கனகலிங்கம் தெரிவித்தார்.

இக் கண்டனப் பேரணியில் அனைத்துத் தரப்பினரும் முழு அளவில் கலந்து கொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்தத் தயாராகுமாறும் அவர் வேண்டுகோள்விடுத்துள்ளார். (ச)

## இலங்கை விமானப் படையின் மிக்-27 தாக்குதல் விமானம் பயிற்சியின் போது வீழ்ந்தது

### விமானி பரசூட் மூலம் தப்பினார்

(கொழும்பு)

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான தாக்குதல் ஜெற் விமானம் ஒன்று பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயம் களப்பில் வீழ்ந்துள்ளது. நேற்றைய தினம் நீர்கொழும்பு பாசியாவத்தைப் பகுதியில் உள்ள களப்பில் காலை 8.45 மணியளவில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் உக்கிரேன் நாட்டுத் தயாரிப்பானதும், 2000ஆம் ஆண்டில் 2 மில்லியன் டொலருககுக் கொள்வனவு செய்யப்பட்ட இவ் மிக்-27 ரக விமானமே வீழ்ந்துள்ளது.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து இரண்டு விமானங்கள பயிற்சியில் ஈடுபடும் பொருட்டு காலை புறப்புட்டன, புறப்பட்டு இரண்டரை நிமிட நேரத்தில் ஒரு கிலோ மீற்றருக்கு அப்பால் 3000

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றத்துக்கு துரோகம் இழைக்கும் உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

### சபாநாயகருக்கு ஐ.தே.க.அழுத்தம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் மக்கள் வைத்துள்ள மதிப்பிற்கும் நம்பிக்கைக்கும் துரோகமிழைக்கும் வகையிலான நடவடிக்கைகளில் ஈடுபடும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கெதிராக சபாநாயகர் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் கூட்டாகக் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக சபாநாயகருக்கு கடிதம் ஒன்றையும் அவர்கள அனுப்பி வைத்துள்ளனர். அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஜாதிக ஹெல உறுமயக் கட்சியைச் சேர்ந்த தயாரத்ன தேரர் நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்து கொளள முற்பட்ட சமயம் ஆளும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதனைத் தடுக்க முற்பட்டதுடன் வேண்டத்தகாத வார்த்தைகளால் தயாரத்தின தேரரைத் திட்டித் தீர்த்துள்ளனர்.

அத்துடன் தேரரை மிக மோசமாகத் தாக்கியுமுள்ளனர். இதனால் பாராளுமன்றத்தின் மீது மக்கள் கொண்டிருந்த நன்மதிப்பும் நம்பிகையும் குறைந்துவிட்டது. பாராளுமன்றம் ஓர் மல்யுத்த களமாகவும் தெருக்கூத்து அரங்கேறும் இடமாகவும் நேற்று முன்தினம் காட்சியளித்ததை மக்கள் அனைவரும் கண்டு திடுக்குற்றனர்.

எனவே இத்தகைய கீழ்த்தர

(12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தேவை

லொறி பொடி அடிப்பவர், ரிங்கா ஒட்டுநர், மெக்கானிக் உதவியாளர், கூலியாட்கள் தேவை. சிவலிங்கம் மோட்டோர்ஸ் 77, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம். (8560)


### பொங்கல் விழா

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை கிழக்கு சித்தியம்பதி அருள்மிகு அண்ணமார் தேவஸ்தானத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 5.00மணிக்கு விசேட பூசைகளுட-ன ஆரம்பமாகவுள்ளது.(உ)

# பாராளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாக்க ஐ.தே.க. கங்கணம்

(ஜாஎல)

நாடாளுமன்றத்தின் இறைமையையும் கௌரவத்தையும் பாதுகாக்கும் விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள் ளது.

நேற்று முன்தினம் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 13வது நாடாளுமன்றம் 4வது தடவையாக கூடிய வேளை இடம்பெற்ற அசம்பாவிதங்கள் நாட்டின் உயர்ந்த ஒரு நிறுவகமாகப் பேணப்பட்டு வரும் நாடாளுமன்றத்தின் இறைமையையும் கௌரவத்தையும் கேலிக்கூத்தாக்கியுள்ளது. இது நாட்டின் நல்லாட்சிக்கு உகந்த ஒரு பண்பாக அமைந்திருக்க வில்லை.

எனவே, இது குறித்து கவலையை வெளியிட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி இத்தகைய செயல்கள் இனிமேலும் நடைபெறாதிருப்பதறகு நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது.

இதற்காக விசேட குழுவொன்றும் அமைக்கப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

(உ-4,61)

# நடேசன் படுகொலை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குக!

## சர்வதேச ஊடகவியலாளர் சங்கம் அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

ஊடகவியலாளர் ஜி.நடேசனின் படுகொலை தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு உலகம் பூராகவும் 5 இலட்சம் ஊடகவியலாளர்களைக் கொண்ட சாவதேச ஊடகவியலாளர் சங்கம் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தனது துணிச்சலான ஊடகச் செயற்பாடுகளால் சர்வதேச சமுகத்தினரினரின் கருத்தையும், கவனத்தையும் ஈர்த்த ஜி.நடேசன் கொல்லப்பட்டமை காட்டுமிராண்டித்தனமானது எனவும், இது இலங்கையில் சமாதான முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி நிற்பதாகவும் சாவதேச ஊடகவியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

கிழக்கில் தொடாச்சியாக இடம்பெறும் படுகொலைகள் தொடர்பான நடேசனின் .இறுதி ஆய்வுக் கட்டுரை அரசாங்கத்துக்கும், அரச படையினருக்கும அசௌகரியங்களை ஏற்படுத்தியிருந்ததாகவும் சாவதேச ஊடகவியலாளர் சங்கததின தலைவா கிறிஸ் தோப்பர் வொரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் ஊடகவியலாளர் டி.சிவராமின் வீட்டின் மீது பொலிஸாரின் அத்துமீறல் சோதனை இடம்பெற்று சில நாட்களுக்குள் தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் கொல்லப்பட்டமை கண்டிக்கத்தக்கதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.(உ)

# சுகாதாரத் தொண்டர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க ஏற்பாடு

(சுதுமலை)

யாழ். மாவட்டத்தில் பல வருடங்கள் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றி வருபவர்களைக் கொண்டு சுகாதாரத் திணைக்களத்தில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணம், கோப்பாய், மானிப்பாய், தெல்லிப்பளை, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் பலவருடங்களாக சேவையாற்றியவர்களிற்கு முன்னுரிமை அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக பதில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் இ.தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதற்கான நேர்முகப்பரீட்சைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

சுகாதாரத் தொண்டர்கள் சுகாதர வைத்திய அதிகாரியின் அத்தாட்சிக்கடிதம் கள வேலைக் குறிப்பீடு அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ்கள் மற்றும் பிறதகைமைச் சான்றிதழ்களுடன் நேர்முகப் .பரீட்சைக்கு சமுகந்தருமாறு கேட்டுக் கொள்ளப்படுள்ளது. (உ-252)


# விவாத அரங்கு 3

விடயம்

A–9 பாதை தமிழர் கலாசாரத்திற்கு

விடிவைத் தருமா? அல்லது அழிவைத் தருமா?

*விவாத விடயத்தை முன்வைக்கிறார் வரணியூரைச் சேர்ந்த A. சங்கீதா.*

நடுவர்:-

ஈழத்தின் பிரபல எழுத்தாளர் பொன். கணேசமூர்த்தி (முகாமையாளர் மக்கள் வங்கி காங்கேசன்துறை கிளை)

*உங்கள் வாதங்களை எழுதி அனுப்புங்கள்*

அனுப்பவேண்டிய முகவரி:-

விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.


## மீன் சந்தை மீது கைக்குண்டுவீச்சு

(திருகோணமலை)

திருகோணமலை மீன் சந்தைக் கட்டடத் தொகுதிமீது இனம் தொியாதோர் கைக்குண்டுத் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இக் கைக்குண்டுத்தாக்குதலில் உயிராபத்துக்கள் எதுவும் ஏற்படாவிட்டாலும் சந்தைக் கட்டடம் சேதமடைந்திருப்பதுடன் அங்கிருந்த பொருட்களும் சேதமடைந்துள்ளன.

திருகோணமலை மாமாயப் பிரதேசத்தைச் சேர்ந்த அந்திரானலகே கபில என்ற பாதாள உலக கோஷ்டியின் உறுப்பினர் ஒருவர் கடந்த 4ஆம்திகதி சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்ட நபரின் இறுதி ஊர்வலத்தின் போதே இக்கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவங்கள் தொடாபாக பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ-4,61)

## யோகாசனப் படக்காட்சி

ஆண்டானின் நெறியாள்கையில் உருவான யோகாசனம் பற்றிய படக கண்காட்சி எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக் கிழமை காலை 6.30 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ் யோகாசன படக் காட்சியானது இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (உ-19)


## அன்பார்ந்த மாணவர்களே!

வலம்புரியின் மற்றுமோர் கல்விச் சேவை

**க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள்**

மிக விரைவில் உங்கள் வலம்புரியில் எதிர்பாருங்கள்.


# வலம்புரி - சங்குநாதம்

## பிரதேச செய்தியாளர்கள் (பயிலுனர்கள்) பதவிக்கு ஆட்சேர்த்தல்

பின்வரும் பிரதேசங்களில், பிரதேச செய்தியாளர்களை (பயிலுனர்கள்) நியமிப்பதற்கான விண்ணபபங்கள் கோரப்படுகின்றன.

- ♦ பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ளவர்களும் க.பொ.த. (சா/த) இல் சித்தியடைந்தவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.
- ♦ பயிலுனர் தரத்தில் மூன்று மாதங்கள் ஈடுபடுத்தப்படுவர். இக் காலத்தில் சேவையில் திருப்தியும் ஒழுங்கும் - ஆர்வமும் காணப்படுமடத்து அவர்கள் நிரந்தரமாக்கப்படுவர்.
- ♦ பயிலுனராக தெரிவு செய்யப்படுபவர்கள் நிறுவனத்துடன் பிணை ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.
- ♦ குறித்த பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டுமே அந்தந்தப் பிரதேச செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.
- ♦ இலங்கையில் இருந்து வெளிவரும் எந்தப் பத்திரிகையிலும், ஊடகங்க்ளிலும் செய்தியாளர்களாகப் பணியாற்றுபவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியாது.
- ♦ ஏற்கனவே பத்திரிகைத்துறையில் அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிப்பின் அவர்கள் நிரந்தரச் செய்தியாளர்களாக உள்ளீர்க்கப்படுவர்.

### தகுதியானவர்கள்

முழுப்பெயர், நிரந்தரமுகவரி, தபால் முகவரி, பால், பிறந்த திகதி, தே.அ.அ. இல, விவாக நிலை, தொழில்புரியும் இடம், பதவி (இருப்பின்), கிராம சேவையாளர் பிரிவு, பிரதேச செயலர் பிரிவு, பிரதேச சபைப் பிரிவு, தொலைபேசி இலக்கம் (இருப்பின்) கல்வித்தகைமை, பிறதகைமை என்பவை உள்ளிட்டதாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை,

**பிரதம ஆசிரியர்,
வலம்புரி, சங்குநாதம்,
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்**

எனும் முகவரிக்கு 15.06.2004க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ, அன்றி தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும்.

குறிப்பு: நேர்முகப் பரீட்சைக்கான அறிவித்தல் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

*நிர்வாக உத்தியோகத்தர்*

### பிரதேச செய்தியாளர் (பயிலுனர்) தெரிவிற்கான பிரதேசங்கள்

**வலிகாமம்**

திருநெல்வேலி
நல்லூர்
கந்தர் மடம்
கோண்டாவில்
கொக்குவில்
மானிப்பாய்
உரும்பிராய்
சண்டிலிப்பாய்
சங்கானை
சித்தங்கேணி
அராலி
வட்டுக்கோட்டை
மாதகல்
பண்டத்தரிப்பு
சில்லாலை
தாவடி
இணுவில்
மருதனார்மடம்
சுன்னாகம்
மல்லாகம்
தெல்லிப்பழை
நாவாந்துறை
வண்ணார்பண்ணை
கொட்டடி
பாசையூர்
நாயன்மார்கட்டு
கல்வியங்காடு
நீர்வேலி
சிறுப்பிட்டி
ஆவரங்கால்
அச்சுவேலி
இடைக்காடு
புத்தூர்
ஊரெழு
புண்ணாலைக்கட்டுவன்
அச்செழு
குப்பிளான்
ஓட்டுமடம்
நீராவியடி
அத்தியடி
அரியாலை
கரம்பொன்
நாரந்தனை
சரவணை

**தீவகம்**

மண்டைதீவு
அல்லைப்பிட்டி
வேலணை
புங்குடுதீவு
நயினாதீவு
நெடுந்தீவு
அனலைதீவு
எழுவைதீவு
சுருவில்

**வடமராட்சி**

கரணவாய்
நெல்லியடி
நவிண்டில்
வல்வெட்டி
வல்வெட்டித்துறை
தொண்டைமானறு
துன்னாலை
அல்வாய்
வியாபாரி மூலை
கொற்றாவத்தை
நாகர்கோவில்
செம்பியன்பற்று
மணற்காடு
பொலிகண்டி

**தென்மராட்சி**

நாவற்குழி
மறவன்புலோ
கைதடி
நுணாவில்
சாவகச்சேரி
மீசாலை
மட்டுவில்
சரசாலை
கொடிகாமம்
வரணி
மிருசுவில்
எழுதுமட்டுவாள்
முகமாலை
பளை

**வன்னிப் பிராந்தியம்**

கிளிநொச்சி
வட்டக்கச்சி
முருகண்டி
மல்லாவி
மாங்குளம்
வவுனிக்குளம்
கனகராயன் குளம்
நெடுங்கேணி
புளியங்குளம்
முல்லைத்தீவு
முள்ளியவளை
புதுக்குடியிருப்பு
விசுவ மடு

# அதிரடி நடவடிக்கை மூலம் பணயக் கைதிகள் விடுதலை

(பக்தாத்)

இரண்டு மாதங்களாகப் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த ஒரு போலந்துக்காரர் மற்றும் மூன்று இத்தாலியப் பணயக் கைதிகளை அதிரடி நடவடிக்கை மூலம் மீட்டுள்ளதாக ஈராக்கின் அமெரிக்கக் கூட்டுப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இத்தாலிய வெளிவிவகார அமைச்சர் பிராய்கோ பிரட்டினியின் தகவல்படி அமெரிக்க இராணுவத்திற்குக் கிடைத்த தகவல் ஒன்றின் பேரில் அமெரிக்க மற்றும் போலந்துப் படைகள் பக்தாத்தின் தென் பகுதியில் நடாத்திய அதிரடி நடவடிக்கை ஒன்றின் மூலம் இந் நால்வரும் விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. ஜி-8 கைத்தொழில் நாடுகளின் கூட்டத்தில் பங்கெடுக்கும் இத்தாலிப் பிரதமர் சில்வியோ புருலஸ் கோனிக்கும் இதுபற்றி அறிவிக்கப்பட்டது.



அமெரிக்கப் படைகளின் ஈராக்கிய தளபதி றிக்காடோ சஞ்சேஸ் ஒரு இத்தாலிய பணயக் கைதி மற்றும் போலந்து இராஜதந்திரி சகிதமாகச் செய்தியாளர்களிடம் பேசியபோது, இழப்பெதுவுமின்றி இவர்கள் மீட்கப்பட்டதாக மட்டும் சொன்னார். எங்கே , எப்போது, எப்படித் தாக்குதல் நடாத்தப்பட்டது என்பது பற்றி எந்தத் தகவலும் கூற மறுத்துவிட்டார்.

(யே)

# சவூதியின் கரீஜ் நகரில் அமெரிக்கர் சுட்டுக்கொலை


(றியாட்)

சவூதி அரேபியாவின் கிழக்கு மாவட்டமான கல்ஜில் அமெரிக்க பிரஜை ஒருவர் இஸ்லாமியத் தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.



சவூதிஅரேபியாவில் வேலை பார்க்கும் வெளிநாட்டவர்களைத் தாக்கப் போவதாக இஸ்லாமிய தீவிரவாதிகள் அறிவித்தபின்னர் வெளிநாட்டவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது தாக்குதல் இதுவாகும். கடந்த ஞாயிறு பி.பி.சி செய்தியாளர் ஒருவர் கொலைசெய்யப்பட்டு, இன்னும் ஒருவர் காயமடைந்த, தூப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்குப் பிற்பாடு மூன்று நாட்களுக்குள் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மரணமடைந்தவர் சவூதி அரேபியாவின் தேசிய காவல் படையினருக்கு பயிற்சி வழங்கும் வின்னெல் அரேபியா கோப்பரேஷன் கம்பனியில் வேலைபார்த்து வந்தார். சவூதிஅரேபிய மன்னர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவருவதில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் முனைப்படைந்து இருப்பதாக விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். (யே)




சூரியனை வெள்ளிக்கிரகம் நேற்று முன்தினம் கடந்து சென்றபோது.

# ஈராக் தொடர்பான விவகாரத்தில் ஐ.நா.ஏகமனதாகத் தீர்மானம்

(வியன்னா)

எதிர்வரும் யூன் 30ஆம் திகதி ஈராக்கின் நிர்வாகத்தை ஈராக்கியர்களிடம் கையளிப்பது மற்றும் புதிய ஈராக் நிர்வாகத்தின் வேண்டுகோளுக்கிணங்க அமெரிக்கா தலைமையிலான சர்வதேசப் படைகள் ஈராக்கில் செயற்படுவது தொடர்பில் ஐ.நா வின் பாதுகாப்புச் சபை ஏகமனதாக ஒப்புதல் வழங்கியுள்ளது.



15 நாடுகள் அடங்கிய பாதுகாப்புச் சபையில் ஐ.நா வின் 1546 வது தீர்மானமாக இது வாக்கெடுப்பிற்கு வந்தபொழுது, ஐ.நா செயலர் கோபி அனான் அவதானித்துக் கொண்டிருந்தார். ஐ.நா பாதுகாப்புச் சபைத் தலைவர் லோரா பாச்சா 15 வாக்குகள் ஆதரவாக வந்துள்ளன என்று அறிவித்தார். ஈராக்கின் சார்பாக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சரின் சிரேஷ்ட ஆலோசகர் பெய்ஸல் அமீன் அவதானியாகக் கலந்து கொண்டார்.

பல வாரங்களாக அமெரிக்கா மேற்கொண்ட இராஜந்திர நகர்வுகள் காரணமாக பிரான்ஸும் ஜேர்மனியும் ஆதரவாக வாக்களித்தன. இது புஷ் நிர்வாகத்திற்குக் கிடைத்த பாரிய வெற்றியாகக் கருதப்படுகிறது. (யே)

# இந்திய பக்மதி நதி விபத்தில் 65 பேர் பலி 15பேரைக் காணவில்லை

(பீகார் - இந்தியா)

கிழக்கிந்திய மாநிலமான பீகாரின் பக்மதி நதியில் இடம் பெற்ற இருவேறு விபத்துக்களில் 65 பேர் கொல்லப்பட்டதுடன், 15 பேர் காணாமல போயுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை திருமண வைபவமொன்றிற்குச் சென்ற 32 பேரை ஏற்றிக் கொண்டு பயணமான பஸ் வண்டி ஒன்று கட்டுப்பாட்டை இழந்து பக்மதி நதியில் குடைசாய்ந்ததில் 25 பேர் கொல்லப்பட்டனர். 7பேர் நீந்திக் கரைசேர்ந்தனர்.

இவ் விபத்து இடம் பெறுவதற்குச் சில மணித்தியாலங்களுக்கு முன்னர் பெண்களையும் சிறுவர்களையும் அளவுக்கதிகமாக ஏற்றிச் சென்ற படகு ஒன்று குடை சாய்ந்ததில் 40 பேர் கொல்லப்பட்டதுடன் 15 பேர் காணமால போயுள்ளனர்.

கடும் மழை காலம் ஆரம்பித்து ள்ளதால் பக்மதி ஆறுவெள்ளப் பெருக்கினால் நிரம்பி வழிகிறது. பெரும்பாலானவர்கள் சுழியில் அகப்பட்டு மரணமடைந்துள்ளனர்.

(யே)




# தாய்லாந்தில் மீண்டும் தாக்குதல் பிரிவினைவாதிகள் கைவரிசை

(பாங்கொக்)

தாய்லாந்தின் தென்பகுதியில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படுவோரால் பௌத்த மதத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் வெட்டிக் காயப்படுத்தப்பட்டுள்ளார். தாய்லாந்தின் தென் பிராந்தியத்தில் தொடர்ந்தும் இது பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

பெரும்பான்மையான பௌத்தர்களைக் கொண்டுள்ள தாய்லாந்தின் தென்பகுதி மாகாணங்களான நாராதிவட், பட்டானி, யால ஆகியவற்றில்



முஸ்லிம்களே பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இம் மாகாணங்களில் சுயாட்சிகோரிப் போராடும் முஸ்லிம் தீவிரவாதிகள் இங்குள்ள சிறுபான்மைப் பௌத்தர்களைக் கொலை செய்து வருகின்றனர்.

பொலிஸார்,கிராமத்தலைவர்கள் மற்றும் பௌத்த மதத்துடன் தொடர்புடைய அரச உத்தியோகத்தர் ஆகியோரை இவர்கள் இலக்கு வைத்துத் தாக்கிவருகினறனர். இந்த வருடதில் மாத்திரம் 284 பொது மக்கள் இத் தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (யே)

# கொரியாவில் இருந்து துருப்புக்கள் வெளியேற்றம் தீர்மானமாகவில்லை

## தென்கொரிய பாதுகாப்பு அமைச்சர்

(சியோல்)



தென்கொரியாவிலுள்ள 37ஆயிரம் அமெரிக்கத் துருப்புக்களில் நான்கில் மூன்று பகுதியை வாபஸ் பெறப்போவதாக அமெரிக்காவின் முடிவு இன்னும் ஊர்ஜிதமாகவில்லை என்றும் பெரும்பாலும் இது நடைமுறைச் சாத்தியமற்றது என்றும் தென்கொரியப் பாதுகாப்பு அமைச்சர் சோ.யங்.கில் அறிவித்துள்ளார்.

கொரிய தீபகர்ப்பத்திலிருந்து அமெரிக்கப் படைகள் வாபஸ் பெறறால் வடகொரியாவிடம் இருந்து வரும் அச்சுறுத்தல்களை தனியே சமாளிப்பது தென்கொரியாவால் முடியாத காரியம் என்று சோ.யங் கூறினார்.



உலகிலேயே மூன்றாவது அதிகளவான இரசாயன ஆயுதங்களை வைத்திருக்கும் வடகொரியா அணுவாயுத பலத்தையும் கொண்டிருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. ஈராக்கில் மேலதிக படையணிகளுக்காகவே கொரியாவில் இருக்கும் அமெரிக்கத் துருப்பினர் தேவைப்படுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளபோதிலும் இது ஒரு விஷப் பரீட்சையாக அமையும் என்று தென்கொரியா அறிவித்துள்ளது.

அமெரிக்கா தென்கொரியாவில் 37,500 துருப்பினரையும் 140 டாங்கிகளையும் 170 சண்டைக்கலங்களையும் 70f-16 யுத்த விமானங்களையும் 20 குண்டு வீச்சு விமானங்களையும் 3,u-2 வேவு விமானங்களையும் நிறுத்தியிருக்கிறது. (யே)

# யாழ்ப்பாணக் கலாசாரப் பிறழ்விற்கு காரணமாகும் தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள்

## விவாத அரங்கு 7

**தொலைக்காட்சியில் தொடராக இடம் பெறும் நாடகங்களினால் யாழ்ப்பாணக் குடும்ப - சமூக - கலாசார - பண்பாட்டு உறவுகள் பலப்படுகின்றதா? பலவீனப்படுகின்றதா?**

*என்ற தலைப்பிற்கு ''பலவீனப்படுகின்றது'' என்ற தலைப்பின் கீழ் ஞா. அருளானந்தம், ஜெஸ்ரின் ஆகியோர் தமது வாதப்பிரதிவாதத்தினை முன்வைக்கின்றனா.*

இன்று எங்கள் யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கின்றது? அன்ரனாக்கள் இல்லாத வீடுகளே இல்லை. கடன்பட்டாவது தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்குவதில் காட்டுகின்ற அக்கறையைப் பார்க்கின்றபோது, யாழ்ப்பாணத்துச் சமூகம் முழுநேர பொழுதுபோக்குச் சாதனமாக தொலைக்காட்சித் தொடர்களுக்குள் தொலைந்து போயுள்ளமை தெளிவாகிறது.

### பெண்களே மையப்-பொருள்

அனைத்து அலைவரிசகளிலும் இடம்பெறும் தொடர் நாடகங்களில் முதன்மையான கருப்பொருள் ''பெண்கள்'' மைதிலி தொடக்கம் மருமகள் வரை கதாநாயகியும் பெண்கள், வில்லியும் பெண்கள். அதைப் பார்ப்பதும் அநேகமாகப் பெண்கள் தான். மூன்று வருடமாக ஒரு நாடகத் தொடரின் கற்பனைக் கதைக்குள் நேரங்களை வீணாக்கி ஏன் தான் இத்தகைய நாடகங்களை பார்க்கிறார்கள் என்றால், உளவியல் ரீதியான பாதிப்பும் ஒரு காரணம்.

எங்கள் கலாசாரத்தில் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற வரையறைக்குள் பெண்கள் அடக்கப்படுகின்றனர். ஆனால், தொலைக்காட்சி நாடகங்கள் மூலம் அவர்களின் நிலைதான் எங்கே? என்ன தான் கூறினாலும் சன் ர.வி, சக்தி ர.வி, ஸ்ரார், பொதிகை போன்றவற்றுக்குள் கண் புதைத்து காலம் கழிக்கும் ஒரு கூட்டம் இருக்கத்தான் செய்கின்றது.

### பொழுதுபோக்கு வாழ்கையல்ல

வாழ்க்கையில் பொழுது போக்கு இருப்பது ஆரோக்கியமானது தான். ஆனால் பொழுது போக்கே வாழ்கை ஆவது ஆபத்துத்தானது. தொலைக்காட்சி நாடகத்தில் காட்டப்படும் சோபா கதிரைகள், பெண்கள் அணியும் உடைகள், ஆபரணங்கள் போன்றவற்றை தாமும் வாங்க வைக்கும் விளம்பர உத்தி, கண்ணுக்குத் தெரியாத சுவர் தான். இது மட்டுமல்ல எமது பாரம்பரிய கலாசார நாடகங்கள், கூத்து கலைகள் யாவும் மழுங்கடிக்கப்பட்டு வருகின்றன என்ற விடயம் திருமறைக் கலாமன்றம் மேற்கொண்ட ஆய்வின் மூலம் இந்த உண்மை வெளிப்பட்டுள்ளது. நாடகங்களில் சிறு சிறு உச்ச உணர்வலைகளை வைத்து தொடர்ச்சியாக மக்களை அதற்குள் மூழ்க வைக்கும் நிலையில் அதைத் தயாரித்த நிறுவனங்கள் பாராட்டப்பட வேண்டியவை.

ஆனால், இவற்றை சந்திப்போர் தான் கவலைக்கிடமானவர்கள்.

விருந்தோம்பற் பண்பு மிக்க எங்கள் யாழ். சமூகமானது அத்தப் பண்புகள் அறவே அற்றுப் போய் வருகின்றது. வந்தவருடன் கதைக்கக் கூட முடியாதளவுக்கு ரீ.வி நாடகம் பலவீனப்படுத்துகின்றன. இவற்றால் கணவன் மனைவிக்கு இடையே விரிசல் ஏற்படுத்தவும் செய்கின்றது.

சிறுவர்களின் கல்விப் பாதிப்பு எப்படி என்று பார்ப்போமா? 4.30 மணி தொடக்கம் இரவு 9.00 மணிக்கு மேல் தொலைக்காட்சி தொடர்களின் ஆதிக்கத்தினால் பெற்றோர்களே அதற்குள் மூழ்க்கிப்போய் இருக்கையில் சிறுவர்களின் நிலை கவலைக்கிடம் தான். இது தவிர குழந்தைகளுக்காகக் காண்பிக்கப்படும் சக்திமான் தொடரால் சிறுவர்கள் மதில்களில ஏறி கால்களை முறித்த சம்பவங்கள் தான் யாழ்ப்பாணத்தில் எத்தனை?

பள்ளிச் சிறார்கள் படித்துப் படித்து களைத்துவிடும் போது சற்று ஓய்வுவெடுக்கவென வேலன், விக்கிரமாதித்தன், சக்திமான், ஜீபூம்பா போன்றவற்றைப் பார்க்க விடுவதால் சிறுவர்களையும் தொலைக்காட்சி மோகத்திற்குள தான் இட்டுச் செல்கிறது.

### கலாசாரப் பிறழ்வு

இன்று யாழ்ப்பாணத்தில் ஆள் கடத்தல், கொலை, களவு பெருகி வருவதற்கும், விவாகரத்து பெறுவதற்கும் தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் தான் பாடம் சொல்லித் தருகின்றன. சினிமாவை எடுத்தால், வில்லன் பாத்திரங்கள் போல தொலைக்காட்சி நாடகங்களில் பெண் வில்லி, மாமியார் மருமகள் சண்டை... இப்படியே பல கதை, காட்சிகள் செல்கின்றன.

இனிவரும் காலங்களில் கலை சார் நிகழ்வுகளை யாழ்ப்பாணத்தில் நடத்துவதாக இருந்தால் தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகள் இல்லாத நேரத்தைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகி இருக்கிறது. மிகுந்த சக்தி வாய்ந்த சாதனம் தொலைக்காட்சி, அதற்குள் யாழ்ப்பாண குடும்ப சமூக - கலாசார- பண்பாட்டு உறவுகள் பலவீனப்பட்டு நிற்கின்றது. இந்த நிலை மாற வேண்டும்.

**ஜெஸ்ரின்**
**கொழும்புத்துறை**

# தொலைக்காட்சித் தொடர் நாடகங்களால் பலவீனப்படும் யாழ். சமூகம்!

குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்ற விஞ்ஞானி டாவின் அவர்களின் கருத்து மறைந்து, குளோனிங் முறையில் குழந்தைகளை உருவாக்கும் அளவிற்கு விஞ்ஞானம் வளர்ந்து விட்டதென்று பெருமைப்படும் மனித குலம், நீறுபூத்த நெருப்பாக கண்ணுக்கும் காதுக்கும் எட்டாது உள்ளுணர்வுகளால் மட்டும் உணர்ந்துகொண்ட தனி மனித வன்முறைக் கலாசாரங்களை தன்னகத்தே வளர்த்து, காலப்போக்கில் கூட்டாக நடைமுறைப்படுத்தும் இன்றைய தலைமுறை சீர்கெட்டுப் போவதற்கு அடிப்படைக் காரணம் தொலைக்காட்சி நாடகங்களே என்றால் மிகையாகாது.

உளவியல் ஆய்வாளர்களின் கூற்றுப்படி, ஒரு கர்பபிணப் பெண்ணிற்கு ஏற்படும் அதிர்ச்சி, தாக்கம் கருவிலிருக்கும் குழந்

> **அனேகமான தொலைக்காட்சி நாடகங்களில் வரும் பாத்திரங்களை ஓர் வினோதமான, சக்திவாய்ந்த மனிதர்களாக மக்கள் மத்தியில் முன்வைக்க முனைகின்றார்கள் இயக்குநர்கள். அதாவது கல்லூரியிலே குழப்பம் விளைவித்தல், ஆசிரியர்களை அவமதித்தல், சக மாணவிகளைத் தகாத வார்த்தைகளால் இம்சைப்படுத்தும் காட்சிகளைப் பார்க்கும் நமது நாட்டு இளைஞர் கோஸ்ரி உணர்ச்சிவசப்பட்டு தங்களையும், வில்லன்களாக எண்ணி, மனம்போன போக்கிலே சென்று ஓர் கசப்பான அபிப்பிராயங்களை மக்கள் மத்தியில் பெற்றுக் கொள்கிறார்கள்.**

தையைப் பாதிக்கக்கூடியவை. அந்த வகையில் சில இளைஞர் கூட்டம் வன்முறைச் சம்பவங்களையும், ஆபாசக் காட்சி களையும் தொலைக்காட்சி ஊடாகப் பார்த்து ரசித்து உணர்ச்சிவசப்பட்டு வன்செயல்களில் ஈடுபட்டால் அவற்றைத் தடுத்துவிடக் கூடியவை, ஆனால் இச்செயல்கள் தொடருமானால் அவைகள் கொலைகளிலேயேயும் அதனூடாக சிறைச்சாலை வாயிலிற்கு இட்டுச் செல்லும்.

இன்று எத்தனையோ பெற்றோர்கள் தங்கள் பெண் பிள்ளைகளை மாலை நேர விசேட வகுப்புகளிற்கு அனுப்புவதற்கு அஞ்சுகிறார்கள். காரணம் வாலிபக் குழுக்களின் தகாத வார்த்தைப் பிரயோகங்களே. ஆனால், சில சமயங்களில் வார்த்தைகளோடு மட்டும் நின்றுவிடாது, மாணவிகளை. ஏமாற்றி அல்லது விருப்பத்திற்கு மாறாகக் கடத்திச் சென்று கற்பைச் சூறையாடும் சம்பவங்களை நாங்கள் ஊடகங்கள் வாயிலாகக் காண்கின்றோம். இப்படியான செயற்பாடுகட்கு உள்ளாக்கப்பட்ட பெண்கள் சிலர், அவமானம் தாங்கமுடியாது தற்கொலை செய்துகொள்ளும் சம்பவங்களும் உண்டு. வேறு சிலர் சமுதாயத்தினால் ஒதுக்கப்பட்டு வாழமுடியாத நிலையிருந்தும் வாழவேண்டிய கட்டாயம் அல்லது நிர்ப்பந்தம் இருப்பதால் தப்பான பாதையில் செல்லத் தூண்டப்பட்டு தவறான பாதையில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் யுவதிகளின் எதிர்காலம் என்னவாகும் என்று சிந்திப்போம். அதுமாத்திரமல்ல தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் என்ற முதுமொழிககொப்ப சிறுவயதில் மதுவிற்கு அடிமையாகி அதிலிருந்து மீளமுடியாது கைகால் வலுவிழந்து, குடும்ப உறவிலும் உறுதியில்லாது வீட்டிலே முடங்கிக்கிடக்கும் ஆண் வர்க்கத்தை இன்று நாம் காண முடிகிறது.

ஆனால், மேற்கூறிய குற்றச் செயல்களிற்கு இளைஞர் - யுவதிகளை மட்டும் குற்றம் சொல்வதற்கில்லை. வீட்டுப் பொறுப்புக்களையும், கடமைகளையும் மறந்த தாய்மார் அதிகநேரம் தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்னால் தங்கள் பொன்னான நேரங்களைத் தொலைக்காட்சி நாடகங்களைப் பார்த்து ரசிப்பதில் செலவிடுவதால், பிள்ளைகளை, கணவனைக கவனிக்கத் தவறிவிடுகிறார்கள்.

அனேகமான தொலைக்காட்சி நாடகங்களில் வரும் பாத்திரங்களை ஓர் வினோதமான, சக்திவாய்ந்த மனிதர்களாக மக்கள் மத்தியில் முன்வைக்க முனைகின்றார்கள் இயக்குநர்கள். அதாவது கல்லூரியிலே குழப்பம் விளைவித்தல், ஆசிரியர்களை அவமதித்தல், சக மாணவிகளைத் தகாத வார்த்தைகளால் இம்சைப்படுத்தும் காட்சிகளைப் பார்க்கும் நமது நாட்டு இளைஞர் கோஷ்டி உணர்ச்சிவசப்பட்டு தங்களையும் வில்லன்களாக எண்ணி, மனம்போன போக்கிலே சென்று ஓர் கசப்பான அபிப்பிராயங்களை மக்கள் மத்தியில் பெற்றுக் கொள்கிறார்கள். அதுமட்டுமல்ல மகாபாரதம், எழுதப்பட்டு பல நூற்றாண்டுகள் கடந்துவிட்டன. ஆனால், அதிலே வரும் குழப்பம் விளைவிக்கும் சகுனிப் பாத்திரம் இன்னும் எத்தனையோ தொலைக்காட்சி நாடகங்களில் புகுத்தப்பட்டு மக்கள் மத்தியிலே பழிவாங்கும் எண்ணம் தலைதூக்கி நிற்பதைக் காண முடிகிறது.

தொலைக்காட்சி நாடகங்கள் காலத்தின் தேவைகளை மையமாகக் கொள்ளாது, காலத்தை காலத்தின் போக்கை மாற்றி அமைக்கும் விதத்தில் தயாரிக்கப்படுகின்றன. அதாவது தங்களுடைய வசூலிற்காக பல ஆண்டு காலமாகப் பேணிவந்த கலாசாரத தைக் கைகழுவி விடுகிறார் கள். ஊடகங்களுடாக சமூ கத்தை, சமுதாயத்தை மெல் லத் தட்டி எழுப்ப முடியும் என்ற கைங்கரியங்களை மறந்து, சீறிச் சிதைந்து உருக்குலைந்து உரு மாறிப் போகும் உள்ளங்களை உருவாக்கி மக்களைப் பலவீனப் படுத்த முனைகிறது தொலைக காட்சி நாடகங்கள். சமீபத்திலே ஓர் ஏழு வயது சிறுவன் தந்தை யின் கண்டிப்பை சகிக்க முடி யாது கிருமிநாசினி அருந்தி இறந்தான் என்றால் அது திசை திருப்பப்பட்ட சிந்தனை என்று கொணடால் அது மிகையாகாது. கலாசாரச் சீரழிவை அடக்கி ஒடுக்க வேறு வழிதெரியாது. சம்பந்தப்பட்ட ஒருவன் இனந்தெரியாதோரால் கொலை செய்யப்பட்டான் என்று பத்திரிகை ஊடாக வெளி வந்த சம்பவம் வன்முறையின் வெளிபபாடே அன்றி வேறேதுமில்லை.

கருத்துக் கணிப்பை முன் வைத்துப் பார்க்கும்போது அனேகமான தொலைக்காட்சி நாடகங்கள் மக்களைப் பலவீனப்படுத்துகின்றது என்ற உண்மை வெளியாகிறது.

**ஞா. அருளானந்தம்**
**யாழ்ப்பாணம்.**

# பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்
# 14 பேருக்கு உள்ளக இடமாற்றம்

(சுதுமலை)

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் பிரிவுகளில் உள்ள 56 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிற்கு இம்மாதம் முதல் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

இவ் இடமாற்றங்கள் இந்த ஆண்டு தொடக்கம் அமுல்படுத்துவதாக முன்னர் அறிவிக்கப்பட்டு பின் இடை நிறுத்திவைக்கப்பட்டு திரும்பவும் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம், யாழ்.மாவட்டத்தில் 14 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிற்கு உள்ளக இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரிப்பிரிவில் கடமை புரியும் எஸ்.குமாரதாசன், எஸ்.அருந்தவராசா ஆகியோர் பருத்தித்துறை சுகாதார வைத்தியப் பிரிவிற்கும், சி.தயாபரன் கோப்பாய் சுகாதார வைத்தியர் பிரிவிற்கும், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமையாற்றும் சி.பிரணவன், க.இளங்கோ ஆகியோர் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்கும், மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமைபுரியும் கே.வர்ணநாதன் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்க்கும் ச.பரமேஸ்வரன், ஊர்காவற்றுறை வைத்திய அதிகாரி பிரிவிற்கும், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமைபுரியும் ரி.கிளின்டஸ் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்கும், எஸ்.சௌந்த்ரராஜா ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்கும், கோப்பாய் சுகாதார அதிகாரி பிரிவில் கடமை புரியும் த.தயாபரன், ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்கும், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமை புரியும் எஸ்.சச்சிதானந்தம் ஊர்காவற்றுறைச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்கும், என்.கஜேந்திரன் பாடசாலைப் பரிசோதனை அலுவலகத்திலிருந்து சாவகச்சேரிப் பிரிவிற்கும், பா.பாலதேவா, பருத்தித்துறை சுகாதாரப்பிரிவிற்கு பாடசாலை மருந்துவ பரிசோதனை அலுவலகத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-252)

# கல்விச் சேவையில் நிலவும்
# வெற்றிடங்கள் நிரப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கல்விச் சேவையில் உள்ள வெற்றிடங்களினை உடனடியாகவே நிரப்புவதற்குரிய நடவடிகைககளை எடுக்குமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் காணப்படும் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆகிய பதவி வெற்றிடங்களே இவ்வாறு நிரப்பப்படவுள்ளன.

மேற்படி பதவிகளுக்கு நீண்ட காலமாக நூற்றுக்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் நிலவுவதால் கல்வித் துறையில் பாரியவீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டே மேற்படி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

(உ-4,61)

# ஆளுங்கட்சியின் அருவருப்பான
# செயலுக்கு ஐ.தே.க. கண்டனம்

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளரால் நியமிக்கப்பட்ட ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவிப்பிரமாணம் செய்வதைக் குழப்புவது சட்டவிரோதமானதென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ஜாதிக ஹெல உறுமய கட்சியைச் சேர்ந்த அத்மீமன தயாரத்தின தேரர் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்ய முற்பட்ட சமயம் ஆளுங்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளைப் பிரயோகத்துத் தேரரைத் தாக்கியுள்ளனர்.

ஆளுங்கட்சியின் இத்தகைய அருவருப்பான செயலை ஐக்கிய தேசியக் கட்சி மிகவன்மையாகக் கண்டிப்பதுடன் எதிர்காலங்களில் இவ்வாறு நடந்து கொள்ளவேண்டாம் எனவும் கேட்டுக் கொள்கிறது.

அத்துடன், பாராளுமன்ற ஒழுக்க நெறிகளை சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் மதித்து நடக்க வேண்டும் எனவும் அவர் மேலும் கேட்டுக் கொண்டார். (உ-60,10)

# தனியார் பஸ் கட்டண அதிகரிப்பு
# இப்போதைக்குச் சாத்தியமில்லை

(கொழும்பு)

தனியார் பஸ் கட்டணம் அதிகரிக்கப்படுவது சம்பந்தமாக எந்தவித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லையென போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது குறித்து ஆணைக்குழுவின் தலைவர் அமல் குமாரகே கருத்து வெளிடுகையில், பயணிகளுக்கு எந்தவித நன்மையும் வழங்கப்படாத வகையில் (திருப்தியற்ற வகையில்) தனியார் பஸ் சேவைகள் நடைபெறுமானால், பஸ் கட்டணங்களை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

செயற்பட்டாது பயணிகளின் நன்மை கருதியும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் செயற்படவேண்டும்.

இதேசமயம், பயணிகளுக்கு தனியார் பஸ் சேவையாளர்கள் வழங்கிவரும் சேவைகளின் தரம் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றதுடன்,

அதன பெறுபேறுகள் குறித்து எதிர்வரும் 15ஆம் திகதக்கு முன்னர் ஆராயவுள்ளோம்.

அதன் பின்னரே தனியார் பஸ்கட்டண அதிகரிப்புக் குறித்த கருத்தை வெளியிடுவோம் என்றார்.

(உ-60,10)

# செய்தித்துளிகள்

## பழைய மாணவர் நிதி அன்பளிப்பு

(பருத்தித்துறை)

தென்புலோலி புற்றளை மகா வித்தியாலயத்திற்கு கனடாவில் வசிக்கும் இவ் வித்தியாலய பழைய மாணவரொருவர் 1 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா நிதியை அன்பளிப்புச் செய்துள்ளார்.

வித்தியாலய பழைய மாணவர்கள் இந்நிதியைப் பொறுப்பேற்று கணனி அறை நிர்மாண நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.(உ-52)

## இலவசப் பாடநூல் வழங்கப்படவில்லை

(செம்பியன்பற்று)

தரம் 10, 11ற்கான வணிகக் கல்வியும் கணக்கீடும் இலவசப் பாடநூல் இதுவரை வழங்கப்படவில்லை.

இப்பாடத்தைக் கற்கும் மாணவர்கள் பாடநூல் இல்லாமையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இப் பாடத்திற்குப் பல பயிற்சிப் புத்தகங்கள் வெளிவந்த போதும இலவசப் பாடநூல் இல்லாதமை பெருங்குறையாகவே உள்ளது.

ஏனைய தொழில் நுட்பப் பாடங்களைக் கற்கும் மாணவர்கள் குறைவாக இருந்தபோதும் அதற்கான இலவசப் பாடநூல்கள் வந்துள்ளன.

ஆனால், வணிகக் கல்வியும் கணக்கீடும் என்ற பாடத்தைக் கற்கும் மாணவர்கள் அதிகமாக இருந்த போதும் இதற்கான இலவசப் பாடநூல் இன்னமும் வழங்கப்படவில்லை. (உ-42)

## கட்புலனிழந்தோருக்கு வீடமைப்புத் திட்டம்

(கொழும்பு)

கட்புலனிழந்தோர் சங்கம் தமக்கென வீடமைப்புத் திட்டம் ஒன்றை அமுல் செய்யுமாறு அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

முன்னைய அரசாங்கங்கள் கட்புலனிழந்த தமக்கு எந்தவித நன்மைகளையும் வழங்கவில்லை என குற்றஞ்சாட்டியுள்ள சங்கம் தற்போதுள்ள அரசாங்கமாவது கட்புலனிழந்த தமக்கு உதவவேண்டும் எனக் கேட்டுள்ளது. (உ-60,10)

## பொதுக் கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ்.மாநகர சபை ஊழியர் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தின் 37வது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் சங்கத்தலைவர் செ.மார்லின் பெர்னான்டோ தலைமையில் நடைபெறவுள்ளது.

மாநகர சபை ஆணையாளர் இ.இராமலிங்கம் இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (உ-51)

## தகைமைச் சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒழுங்கமைப்பு நிர்வாகத்தின் கீழ் இயங்குகின்ற இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இலவச கணனிப்பயிற்சி நிலையத்தில் பயின்ற முதலாவது தொகுதி மாணவர்களுக்கான தகமைச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கில்னர் லேனில் அமைந்துள்ள மேற்படி பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பின் தலைவர் ரி.வி. ரவிசங்கர் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் ந.கண்ணன், தமிழீழ மாணவர் அமைப்பின் யாழ். மாவட்ட பொறுப்பாளர் எஸ்.எழிலன்பன், ஆசிரியர் சி.கிருஸ்ண குமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-)

## உணவுப் பொதிகள் வழங்கப்படவில்லை

(இணுவில்)

உலக உணவுத்திட்டத்தின் கீழ மேற்கொள்ளப்பட்ட குண்டுக் குளம புனரமைப்பில் ஈடுபட்டவர்களுக்கான உணவுப்பொதிகள் இன்னமும் வழங்கப்படவில்லை. (உ-122)

## தொழிலாளி பலி

(மட்டக்களப்பு)

டயகம அக்கரைப்பத்தனைப் பகுதியில் நேற்று முன்தினம் வீசிய பலத்த காற்றினால் மரமொன்று சாய்ந்து விழுந்ததில் அதில் அகப்பட்ட தோட்டத் தொழிலாளி ஒருவா பலியானார்.

இறந்த தொழிலாளியின் குடும்பத்திற்கு நட்டஈடு வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக சமூக அபிவிருத்தி பெருநதோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் கலாநிதி பிரதாபராமானுஜன் தெரிவித்துள்ளார். (உ)

## ஈழத்துப் பூதந்தேவனார் மாநாடு

(யாழ்ப்பாணம்)

ஈழத்துப் பூதந்தேவனார், தொலகாப்பியர் மாநாடு எதிர்வரும் ஓகஸ்ட மாதம் 26,27 ஆம் திகதிகளில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டில் இந்திய, இலங்கை அறிஞர்கள் சொற்பொழிவாறறவுள்ளதுடன் ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பிக்கவுள்ளனர்.

இம் மாநாட்டை ஒட்டி நடாத்தபட்ட கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும் அன்றைய தினம் வழங்கப்படவுள்ளன. (உ-19)

## போலிப் பசளை விநியோகத் தடைச் சட்டம்

(கொழும்பு)

போலிப் பசளை விநியோகத்தை முற்றாகத் தடுத்து நிறுத்துவதற்கு புதிய சட்டதிட்டங்கள் அறிமுகப் படுத்தபபடும் என விவசாய அமைச்சர் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

செங்கல்தூள், சீமெந்து, மணல் ஆகியவற்றைக் கலந்து தயாரிக்கப்பட்ட போலி உரத்தை பல்வேறு பெயர்களில் அடைத்து விற்பனை செய்யத் திட்டமிட்ட முயற்சிகள் குறித்துத் தமக்குத் தகவல்கள் கிடைததுள்ளதாகத் தெரிவித்த அவர் இத்தகைய போலிப்பசளைகளை விற்பனை செய்யும் நிலையங்களைச் சுற்றிவளைத்து சோதனை இடுவதறகு விஷேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார். (உ-60,10)

## பனையால் விழுந்து படுகாயம்

(பருத்தித்துறை)

கள்ளுச் சீவுவதற்காகப் பனையில் ஏறியவர் தவறி விழுந்து படுகாயங்களுக்கு உள்ளானார்.

அம்பனைச் சேர்ந்த நல்லான் குணச் செல்வம் (வயது - 46) என்பவரே இவ்வாறு படுகாயம் அடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-52)

## பாடவிதானத்தில் மானுடவியல் இணைப்பு

(கொழும்பு)

பாடசாலைப் பாடவிதானத்தில் மானுடவியல் என்ற பாடம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இன்று கம்பஹா பண்டாரநாயக்க வித்தியாலயத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெறவுள்ள வைபவத்தில், மானுடவியல் என்ற மேற்படி பாடநூல அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

மனித குலவிழுமியங்களை மதித்து நடக்கும் எதிர்கால சந்ததியை உருவாக்குவது இதன் நோக்கமாகும். (உ-60,10)

## பஸ் தரிப்பிட குறியீடு நாசம்

(இணுவில்)

நீண்டகாலமாக பஸ்தரிப்பிடக் குறியீடு இல்லாதிருந்ததை அடுத்து மக்களால் புதிதாகப் போடப்பட்டிருந்த காங்கேசன் துறைவீதி இணுவில் பஸ்தரிப்பிட அடையாளக் குறியீடு இரவோடிரவாக முறித்து அகற்றப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை, மேற்படி இடத்தில் பஸ்தரிப்பிக் குறியீடு நீண்ட காலமாக இல்லாதிருந்ததை அடுத்து மக்கள் முயற்சியின் பேரிலேயே அண்மையில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-122)

## பணியில் இருந்து ஓய்வு

(கொழும்புத்துறை)

யா/புனித சாள்ஸ் மகாவித்தியால அதிபராகப் பணியாற்றிய திருமதி. பி.எவ்.சின்னத்துரை தனது பணியில் இருந்த ஓய்வு பெற்றுள்ளதையடுத்து எம்.ஞானப்பிரகாசம் அவரது இடத்திற்குப் புதிய அதிபராகப் பொறுப்பேற்றுள்ளார். (உ-51)

## சித்திரப் போட்டி

(தாவடி)

மனிதவள அபிவிருத்தி கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு இவ் ஆண்டிலும் பாடசாலை மாணவர்களிடையே சித்திரப்போட்டிகளை நடாத்தி வெற்றிபெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கவுள்ளது.

இந்த வகையில், யாழ்ப்பாணம் நல்லூர் ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு முறையே எதிர்வரும் 12,13 ஆம் திகதிகளில் யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயத்திலும் கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளுக்கு எதிர்வரும் 12 ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் காலை 9 மணிமுதல் சித்திரப் போட்டி இடம்பெறவுள்ளது. (உ-117)

## பண்டிதர் தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சைவபரிபாலன சபை நடத்தும் சைவ சித்தாந்த, பிரவேச, பாலபண்டித, பண்டிதர் தேர்வுகள் எதிர்வரும் 26, 27, 28 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன.

மேற்படி பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ள 55 தேர்வு நாடிகளுக்குமான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (உ-19)

## களவாக மணல் ஏற்றிய உழவு இயந்திரம் தீக்கிரை

(கொழும்புத்துறை)

சட்டவிரோதமாக மண் ஏற்றி வந்த உழவு இயந்திரம் காணி உரிமையாளரால் தீக்கிரையாக்கப்பட்டது.

கடந்த 5ஆம் திகதியன்று அரியாலை முள்ளிப்பகுதியில் வைத்து மண் ஏற்றிவந்த உழவு இயந்திரமே தீக்கிரையாக்கப்பட்டது.

மண் ஏற்றிய வேறு மூன்று உழவு இயந்திரங்கள் உட்பட உரிமையாளர்களை பொலிஸார் பிடித்துச் சென்றுள்ளனர். (உ-51)

## கலாசாரம் பேணக் குழு

(கொழும்பு)


பாசையூர் பகுதியில் கலாசாரத்தைப பேண 40 இளைஞர்கள அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அந்தோனியார் ஆலயத்தின் பங்குத்தந்தை எம்.யேசுரட்ணம் அடிகளார், புலிகளின் யாழ்.பிரதேசப் பொறுப்பாளர் செழியன் தலைமையில் அண்மையில் இடம்பெற்ற கூட்டத்தில் கலாசரத்தைப் பேணும குழுவினரின் கடமைகள், பிரச்சினைகள் என்பன குறித்துக் கலந்துரையாடப்பட்டது. (உ-5)

# எத்தியோப்பியர், கெனன்சியா

# மீண்டும் புதிய உலக சாதனை

எத்தியோப்பிய நாட்டின் நெடுந்தூர ஓட்ட வீரரும் உலக நகரங்களுக்கிடையிலான நெடுந்தூர ஓட்டத்தில் இருதடவை சம்பியன் பட்டத்தை வென்றவருமான கெனன்சியா பேக்ளி ஐயாயிரம் மீற்றரில் உலக சாதனை ஏற்படுத்திப் பத்துத் தினங்கள் செல்வதற்குள்ளாக மீண்டும் பத்தாயிரம் மீற்றரில் புதிய உலகசாதனை படைத்தார்.




ஒஸ்ராவாவில் இடம்பெற்ற சர்வதேச மெய்வல்லுநர் போட்டிகளில் 26நிமிடம் 20.31விநாடிகளில் பத்தாயிரம் மீற்றர் தூரத்தைக் கடந்து புதிய உலகசாதனை படைத்தார் பேக்ளி.

ஆறுவருடங்களுக்கு முன்னர் தனது நாட்டு சகவீரரான ஹெயில் கப்ஸலாசி நெதர்லாந்தில் ஏற்படுத்திய. 26நிமிடங்கள் 22.75 விநாடி எனும் சாதனையை 22வயதான பேக்ளி முறியடித்தார். கடந்த மே 31ஆம் திகதி ஐயாயிரம் மீற்றர் தூரத்திலும் இவா புதிய சாதனையை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. இப் போட்டியிலும் கப்ஸ்லாசியின் சாதனையையே இவர் முறியடித்தமை குறிப்பிடத்தக்கது.

எதிாவரும் எதென்ஸ் ஒலிம்பிக்கில் தான் பத்தாயிரம் மீற்றர் போட்டியில் பங்குபற்றவே விரும்புவதாக இவர் பின்னர் குறிப்பிட்டார். (யே)

# துடுப்பாட்ட வீரர் சிலேட்டர் கிரிக்கெற்றில் இருந்து ஓய்வு

அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணியின முன்னணித் துடுப்பாட்ட வீரரான மைக்கல் சிலேட்டர் கிரிக்கெற் வாழ்வில் இருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்துள்ளார். இவர் அவுஸ்திரேலிய டெஸ்ட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களம்இறங்கி எதிரணிப் பந்து வீச்சாளர்களின் பந்தை அற்புதமாக எதிர்கொண்டு அவுஸதிரேலிய அணிக்காக ஓட்டங்களைப் பெற்றுக கொடுப்பதில் சிறந்தவொரு வீரராகக் கருதப் படுபவர். மைக்கல் சிலேடர் அவுஸ்திரேலிய டெஸட் கிரிக்கெற் அணிக்காக 74டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 14சதங்கள் அடங்கலாக 5 ஆயிரத்து 312ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்திருக்கின்றாா.




இதுதவிர அவுஸ்திரேலியாவின் நியூ சாவுத்வேல்ஸ் அணிக்காக 216 முதல் தரப்போட்டிகளில் விளையாடி 14ஆயிரத்து 912ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டிருப்பதும் இவரது துடுப்பாட்டத் திறமைக்கு மற்றுமொரு சான்றாகும். மைக்கல் சிலேட்டர் 42ஒருநாள் சர்வதேச போட்டிகளில் அவுஸ்திரேலிய அணிக்காக விளையாடியிருக்கின்றார். கடந்த டிசம்பர் மாதம் இங்கிலாந்து அணிக்கெதிராக நடைபெற்ற ஒரு நாள் சர்வதேச போடடியிலேயே இவர் இறுதியாக விளையாடியிருந்தார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணிக்கு கிடைத்த சிறந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மைக்கல் சிலேட்டர் என்பது பெரும்பாலான கிரிக்கெற் விமர்சகர்களின் ஒருமித்த கருத்தாகும். இவர் அவுஸ்ரேலிய கிரிக்கெற் அணிக்காக பல தடவைகள் இதனை நிரூபித்துமிருக்கின்றார். இந்நிலையில் மைக்கல் சிலேட்டர் தனது கிரிக்கெற் வாழ்வில் இருந்து தற்போது ஓய்வுபெறத் தீமானித்துள்ளதாகத் தெரிவித்திருக்கின்றார். (யே-68)

## யூரோ உதைபந்துக்கிண்ணம் 2004

# பிரான்ஸ் உலகின் சிறந்த அணி

# இங்கிலாந்து அதற்கு பயப்படாது




ஓவன்

உலகின் சிறந்த அணி பிரான்ஸ் தான். உலகின் சிறந்த வீரர் என்ற பரிஸை அவ் வணியின் தய்ரி ஹென்றி மிக அண்மையில்தான் பெற்றார். அவர் மிகஅற்புதமான வீரர். அவர்களை நாம் மதிக்கிறோம். ஆனால் அவர்களுக்கு நாம் பயப் படமாட்டோம். இவ்வாறு கூறினார். இங்கிலாந்தின் கோல் போடும் இயத்திரம் என்று வர்ணிக்கப்படும் மைக்கல் ஓவன.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யூரோக் கிண்ணம் 2004க்கான முதலாவது போட்டியில் இங்கிலாந்து அணி பிரான்ஸுடன் மோதுகிறது. பிரேஸில் நாட்டையும், பிரான்ஸ் நாட்டையும் உயர்வாகப் பேசிய ஓவன் ஷினடின் சிடேன் மற்றும் பிறிமியர் லீக் போட்டிகளில் ஆர்ஷனல் கழகத்தை இறுதிவரை அழைத்துச்சென்ற தியறி ஹென்றி போன்ற, அற்புதமான ஆட்டக்காரர்களைப் பிரான்ஸ் கொண்டிருந்த போதும் இங்கிலாந்து அணி எதற்கும் தயாராக விருப்பதாகக் கூறினார்.

இங்கிலாந்து அணிப் பயிற்றுவிப்பாளர் செவன் கோரன் எரிக்சன்



பெக்காம்

உட்பட அணித்தலைவர் .'.டேவிட் பெக்காம் மற்றும் நிர்வாகம் என்பன இப்பொழுது கூட்டாக ஆலோசனையில் ஈடுபட்டுவருவதாகவும் பிராண்ஸ அணியை எப்படியும் வெற்றிகொள்வது என்ற தீமானத்தில் இருப்பதாகவும் தெரிவித்தார். (யே)

# சிறியானி குலவன்ச ஓய்வு பெறப்போவதாக அறிவிப்பு

இலங்கையின் தடகள மங்கை என வாணிக்கப்படும் தடை தாண்டல் ஓட்டவீரங்கனையான சிறியானி குலவன்ச தனது தொழில் சார் மெய்வல்லுநர் விளையாட்டு வாழ்வில் இருந்து ஓய்வுபெறத் தீர்மானித் துள்ளதாக அறிவித்துள்ளார். இதுதவிர உயரம் பாய்தல் போட்டிகளில் தேசிய சாதனையாளராகத் திகழும் சிறியாணி தற்போது இலங்கையின் மெய்வல்லுநன வீர, வீராங்கனைகளுள் சிரேஷ்ட வீராங்கனையாகவும் திகழ்ந்து வருகிறார்.

இவர் 1998ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுநலவாய நாடுகளுக் கிடையிலான விளையாட்டுப் போட்டியில் 100மீற்றர் தடை தாண்டல் நிகழ்ச்சியில் வெள்ளிப் பதக்கம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக 1989 ஆம் ஆண்டு கொங்கொங்கில் நடைபெற்ற ஆசிய நகரங்களுக்கிடையிலான மெய்வலலுநர் போட்டியின் ஊடாக சர்வதேச அறிமுகத்தினைப் பெற்றிருந்தார். 1991ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டியின் உயரம் பாய்தல் நிகழ்ச்சியில் 1.75மீற்றர் உயரம் பாயந்து புதிய சாதனையொன்றை ஏற்படுத்தியிருந்தார். இது தற்போது தெற்காசிய சாதனையாகவே இருந்துவருவது குறிப்பிடத்தக்கது.

இது தவிர தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் 100 மீற்றர் தடைதாண்டல் நிகழ்ச்சியில் மட்டும் ஐந்து தடவைகள் சம்பியன் பட்டத்தினை சூடிக் கொண்டவர் சிறியானி குலவன்ச, இவர் தற்போது ஓய்வுபெறப்போவதாக அறிவித்திருப்பது தனது உடல் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டும், இளம் வீராங்கனைகளை இத் துறையில் உருவாக்கவேண்டும் என்பதற்காகவும் எனத் தெரிவித்திருந்தார். (யே-68)

## விளையாட்டுச் செய்திகள்

# டோ:.பின் சைக்கிள் போட்டியில் ஸ்பெயின் மாயோ முந்நிலையில்



தற்பொழுது நடைபெற்றுவரும் டோ.'.பின் லிபியர் சைக்கிள் ஓட்டப்போட்டியின் முதலாவது கட்டத்தில் ஸ்பெயின் நாட்டு வீரர் இபான் மாயோ முன்னணியில் திகழ்கிறார்.


பிரபல அமெரிக்க சைக்கிள்ஓட்ட வீரர் லான்ஸ் ஆம்ஸ் ரோங்கைப் பின்தள்ளிவிட்டு அவர் முன்னணிக்கு வந்தார். இப்போட்டியில் தான் புதிய உலகசாதனை நிகழ்த்தப் போவதாக லான்ஸ் ஆம்ஸ்ரோங் முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் கட்டப் போட்டிகள் நேற்று ஆரம்பமாகவிருந்தன. முதற் போட்டியில் கவனம் சிதறியதால் நான் இரண்டாம் இடத்தைப்பெற நேர்ந்தது. இது ஏமாற்றமாக இருந்தாலும் இதனை ஒருபுறம் தள்ளிவிட்டு இரண்டாம்

# ஒலிம்பிக் வரலாறு ③

# 1904 ல் செயின்ற் லூயிஸில் இடம்பெற்ற 3வது ஒலிம்பிக்

1904ஆம் ஆண்டில் பரிஸ் ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெற்ற போது அதே வருடம் பரிஸில் இடம் பெற்ற உலக கண்காட்சியால் அது பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியது. அவ்வாறே அமெரிக்காவின் செயின்ற் லூயிஸ் பிரதேசத்தில் 1904ல் இடம் பெற்ற 3வது ஒலிம்பிக் போட்டியும் உலக கண்காட்சி விழாவால் பெரிதும் பாதிக்கப்பட்டது.




சிக்காகோ நகரத்திலேயே ஒலிம்பிக் நடைபெற உத்தரவிடப்பட்ட போதும் செயின்ற் லூயிஸில் உலக வர்த்தகக் கண்காட்சியை நடத்தியோர் தமது நிகழ்வு இதனால் பாதிக்கப்படும் என்றும் இதனால் தாமும் ஒரு விளையாட்டு விழாவை நடாத்த நேரிடும் என்றும் எச்சரித்ததால் அமெரிக்க ஜனாதிபதி பிரானஸின் ரூஸ்வெல்ட், செயின்ற் லூயிஸில் ஒலிம்பிக் போட்டி நடைபெற உத்தரவிட்டார்.

சுமார் நான்கரை மாதங்கள் இபபோட்டிகள் இடம்பெற்றதால் பொது மக்களின் ஆர்வம் குறைந்தது நவீன ஒலிம்பிக்கின் தந்தையான பரன் பியர்கூட இதில் கலந்து கொள்ளவில்லை. பயணச்செலவுகள் மிக அதிகமாக இருந்த படியால் பல நாடுகள் தமது வீரர்களை இங்கு அனுப்பவில்லை. இதனால் அமெரிக்கர்களின் ஆதிக்கமே இங்கு அதிகமாகக் காணப்பட்டது.

மெய்வல்லுநர் போட்டிகளில் அமெரிக்கரே ஆதிக்கம் செலுத்தியபோதும் கூட்டு நிகழ்ச்சியில் ஜரிஸ்காரரான தொமஸ் கீலி வெற்றி பெற்றார். பின் நாளில் இந் நிகழ்ச்சிக்கு டெக்காத்லன் எனும் பெயர் வழங்கப்பட்டது. முக்கியமான பத்து மெய்வல்லுநர் நிகழ்ச்சிகளும் ஒரே நாளில் இங்கு நடாத்தி முடிக்கப்பட்டது.

அமெரிக்க ஜிம் நாஸ்டிக் வீராங்கனை அன்ரன் ஹெய்டா 5 தங்கப்பதக்கங்களையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் வென்று முதன்மையானவராகத் திகழ்ந்தார். ஐரோபபியர்கள் இந்தப் போட்டியைக் கடுமையாக

# ரொனால்ட் வில்சன் ரேகன்

## ரைம் சஞ்சிகை புகழாரம்

1964ல் குடியரசுக்கட்சி வேட்பாளர் பரி கோல்ட் வோட்டருக்காகப் பிரசாரம மேற்கொண்ட ரேகன்




எதிர்க்கட்சி அரசின் வரிக்கொள்கைகளைக் கடுமையாகச் சாடினார். இந்தத் தேர்தலில் கோல்ட் வோட்டர் தோல்வியடைந்த பொழுதிலும் றெனால்ட் ரேகன் அமெரிக்க அரசியல் மையத்தால் கவனிக்கப்படத் தொடங்கினார்.

குடியரசுக்கட்சியின் பிரசாரத்தை முற்றாக நிராகரித்த ரைம் சஞ்சிகை, ரேகனின் பேச்சை 'நிராகரிக்கப்பட வேண்டிய பிரசாரத்தின் மிகப் பிரகாசமான மையம்' என்று குறிப்பிட்டது.

ரேகனின் ஆரம்பங்கள் மிக மோசமாக அமைந்தன. தேர்தல் வாக்குறுதிப்படி அதிரடியாக வரிவிதிப்புக்களை அவர் குறைத்தார். அரச செலவினங்களையும் அவா குறைத்தார். அதன் பயணாக வரவு செலவுத் திட்டத்தில் ஒரு பில்லியன் துண்டு விழும் தொகையை அவர் நிவர்த்திக்க தேர்ந்தது.

மீண்டும் அத்தொகையைப் பெறுவதற்காக வரிகளை அவர் உயர்த்தினார். இதனால் ஆத்திரமடைந்த கலிபோர்னியாவின் பேக்ளி பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர்.

தொடர்ச்சியாக 60களிலும் 70களிலும் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களால் களைப்படைந்திருந்த ஆட்சியாளர்களில் ரேகனும் ஒருவர். அவர் இவ்விடயத்தில் மிகக் கடும் போக்கைக் கையாண்டார். ஒரு கட்டத்தில் கலிபோர்னியப் பொலிஸார் ஆர்ப்பாட்டத்தைக் கலைக்கும்படி அவர் உத்தரவிட்டார்.

இதனால் ஹீரோவுக்குரிய அவரது இமேஜ் பாதிக்கப்பட்டு வில்லனாக மாறும் வாய்ப்பு அதிகரிக்வது தவணையில் வசூலைக் கொடுத்தன. வாஷிங்டனை நோக்கிச் செல்லும் அவரது கனவுகள் இதன மூலம் வலுப்பெறத் தொடங்கின.

## ரேகனும் ஊடகங்களும்


லூ கனன், எனும் எழுத்தாளா, தான் எழுதிய "ரேகன்" எனும் நூலில் அவரைப்பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார். 'எதிர்கால ஜனாதிபதியாக வரவிருந்த ஆளுநர், ஆட்சிபற்றிய சில நோக்கங்களைக்கொண்டிருந்தார். ஆனால் அதனை எப்படிச் செயற்படுத்துவது என்பதுபற்றி அவருக்கு எதுவுமே தெரிந்திருக்க வில்லை. தவறுகள் மூலமே அதனைத் தெரிந்து கொண்டார் என்று எழுதினார்.

தொழில்சார் நிபுணத்துவமிக்க மாநிலமான கலிபோர்னியாவில் அவர் விட்ட தவறுகள் "தலைமைத்துவத்தின் கைபிடி எது" என்பதை அவர் அடையாளம் காண உதவியது என்றும் அவர் எழுதுகிறாா.

ஊடகவியலாளர்களுடன் ரேகன்

## வெள்ளை மாளிகை நோக்கி

சக்கிரமண்டோ ஆளுநர் மாளி கையில் ரேகன் 18மாதங்கள் சென்றதன் பிற்பாடு 1968ல குடியரசுக் கட் சியின் தேசிய மாநாட்டில் அக்கட்சியின் சார்பாக ஜனா திபதித் தேர் தலில் போட் டியிடும் தனது எண்ணத்தை வெளியிட் டார் ஆ.யினு ம் றிச் சட் நக்ச னிடமிருந்து நியமனத்தை மாற்றிக் கொள் வதில காலம் ஏற் கனவே கடந்து வட்



சுதந்திரத்திற்கும், கருக்கலைப்பை மறுதலித்தும் களமிறங்கிய ரேகன், ஈரானில் அமெரிக்கர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட விவ

# எளிய ஆரம்பங்களும்

## கலிபோர்னிய ஆளுநர் ரேகன்

ரேகனின் அற்புதமான பேச்


சோவியத்தின் இறுதி அதிபர் மிக்காயேல்கொர்ப்பச்சேவுடன். 1985

சிலும் கவர்ச்சிமிகு தோற்றத்திலும லயித்துப்போன கலிபோர்னிய மாநிலக் குடியரசுக் கட்சித் தலைவர்கள், அம்மாநில ஆளுநர் பதவிக்குப் போட்டியிடும்படி அவரைக் கோரினர். ஹொலிவூட் திரையுலகில் கிடைத்த தொடர்புகள் மூலமும், குடியரசுக் கட்சித் தலைவர்களின் ஆதரவு மூலமும் 1966ல் கலிபோர்னிய மாநில ஆளுநர் தேர்தலில் குதித்தார்.

**Cow Boy** படங்களில் நடித்துப் புகழ்பெற்ற கவர்ச்சிமிகு ரேகனின் மிக சினேகபூர்வமான பேச்சுக்கள், பாரம்பரியப் பெருமைமிக்க கலிபோர்னியாவை அதன் கீழ் நிலையிலிருந்து மீட்கும் என்று கலிபோர்னியரை நம்பவைத்தது.

அதனால் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட வாக்குகளால் இரண்டு தடவை அம்மாநிலத்தின் மேயராக விளங்கிய ஜனநாயகக்கட்சி வேட்பாளர் பற் பிறவுனை ரேகன் தோறகடித்து கலிபோர்னியக் கவர்னர் ஆனார்.

ஒருகாலமும் பொதுநிர்வாக அலுவல்களில் அனுபவம் பெற்றிராத ரேகன், அமெரிக்காவின் மிகப் பிரபலமான மாநிலத்தின் தலைமை அலுவலகத்திற்கு அதனைத் தெரிந்துகொள்ளப் போனார். நான்சியும் அவரது பிள்ளைகளும் ரேகனின் பொதுவாழ்வுப் பணியில் இனைந்துகொள்ள சக்ரமண்டோ அலுவலகத்திற்குப் பெட்டி படுக்கைகள் சகிதம் பயணமாயினர்.

கலிபோர்னியாவின் ஆளுநர் மாளிகையான சக்கிரமன்டோவில்

கும் என்று பலர் எச்சரித்தபோதும் "விதிகளைக் கடைப்பிடி அல்லது வெளியேறு" எனும் கொள்கையைப் பிரகடனப்படுத்திப் போரட்டத்தைக் கலைத்தார்.

1970ல் மிகச் சிறிய முதல தவணைச் சாதனைகளுடன் இரண்டாவது முறையாகக் கலிபோர்னிய ஆளுநர் பதவிக்குப் போட்டியிட்டார். அதில் அவர் வெற்றியும் கண்டார்.

முரண்பாடுகளால் அல்லற்பட்ட அவரது முதற் தவணைக்குப்பதில்

எப்பொழுதும் சினேகபூர்வமான உறவைப் பேணிவந்தார். ஒரு தடவை மிகக் கரடுமுரடான போககுடைய சிறிய தொலைக் காட்சிச் சேவையின் நிருபர் ஒருவரை நான்சி ரேகன் வெளியேறும்படி உத்தரவிட்டார். ஆயினும் முகச் சவரம் செய்து கொண்டிருந்த ரேகன் அதே கோலத்துடன் மாடிப் படிகளல் அவரோடு இறங்கி வந்து,

**பேதுரு யேசுதாசன்**
**பகுதி-III**

எனது வீட்டின்பின் அறையில் தங்கினால 5நிமிடங்களை உமக்காக ஒதுக்க முடியும் என்று கூறினார். நிருபர் அந்த நகர்வினால் நெகிழ்ந்து போனார்.

இருப்பினும் அமெரிக்க ஊடகங்கள் மத்தியில், ரேகன் ஊடகவியலாளர்கள் மட்டில் நெருக்கமான நட்புறவைப் பேணிய பொழுதும், ரேடியோ மற்றும் தொலைக் காட்சி மூலமாக நேரடியாகவே அமெரிகக்ர்களுடன் தொடர்பு கொண்டார் என்றும் அது அவருக்கு மிகுந்த பலனைக்கொடுத்தாகவும் அபிப்பிராயம் நிலவுகிறது.

டதால் அவ் காத்திருக்க நேர்ந்தது. ஆயினும் அவரது வேண்டு கோளைக கட்சி கருத்தில் எடுத்தது.

1975ல் மூன்றாவது தடவையாக கலிபோர்னிய ஆளுநராகும் பிர

காரத்தாலும் பணவீக்கத்தாலும் விரக்தியடைந்திருந்த அமெரிக்கரின் மனதைக்கவர்ந்தார்.

ஜனாதிபதி வேட்பாளர்களுக்கிடையில் நடக்கும் இறுதிவி


மாட்டின் லூதர் கிங்கின் நினைவு தினத்தை தேசிய விடுமுறையாக அறிவித்த பொழுது.

காசமான வாயப்பைக் கைவிட்டு ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாரானார் ரேகன். 1976ல் ஜனாதிபதி ஜெரால்ட் போர்ட்டுக்கு எதிராகக் குடியரசுக்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் ஸ்தானத்திற்குப் பேட்டியிட்ட ரேகன் 60வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

வாதத்தில் தன்னை எதிர்க்கேள்விகள் கேட்ட ஜனாதிபதி ஜிம்

# வலிய சாதனைகளும்

தனது ஆத்மார்த்த குருவாக



இரண்டாம் தவணை கூட்டுமுயற்சிகளாலும் வெற்றிகளாலும் மெருகூட்டப்பட்டது. அவரது முதற் தவணைத் திட்டங்கள் இரண்டா

ரேகன் வர்ணிக்கும் பிராங்லின் ரூஸ்வெல்டிட் தான் கற்றுக்கொண்ட இம்முறை, தனக்கு வெற்றியைக் கொடுத்தாக ரேகன் குறிப்பிட்டுள்ளார்.

நான்கு வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் இதே நியமனத்திற்காக ரேகன் போட்டியிட்டார். இவ் வேளை ஏற்கனவே ஜெரால்ட் போர்ட் ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக்கட்சி வேட்பாளர் ஜிம் மிக்கார்ட்டரிடம் தேர்வியுற்றதால் குடியரசுக்கட்சியின் பிரகாசமான தெரிவாக ரேகனே விளங்கினார். இத்தெரிவில் அவர் வெற்றியும் பெற்றார்.

தனது உதவி ஜனாதிபதி வேட்பாளராக முந்நாள் சி.ஐ.ஏ.இயக்குநரும் ஐ.நா.தூதுவரும், டெக்ஸாஸ் மாநில அரசியல்வாதியும், தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் தந்தையுமான சீனியர் ஜோர்ச் புஷ்ஷை ரேகன் அறிமுகம் செய்தார்.

அமெரிக்கப் பெறுமதிகளின் மீட்சிக்கும் மாநிலங்களின் வரிக் குறைப்புக்கும், வர்த்தகத்தின்

மிக் காட்டரிடம், 'நான்கு வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலையைவிட அமெரிக்கர்கள் இப்



பொழுது நல்ல நிலையில் இருப்பதாக உங்களால் கூறமுடியமா' என்று கேட்டார் ரேகன். மௌனியாய் நின்ற காட்டரை மக்கள் நிராகரித்து ரேகனை அமெரிக்காவின 40 தாவது ஜனாதிபதியாக அரியணை ஏற்றினர். 69 வயதில் அதிக வயதான ஜனாதிபதி எனும் பெயருடன் 20தாம் நூறாண்டின் மிகப் பிரபலமான ஜனாதிபதிகளுள் ஒருவரான ரேகன் வெள்ளை மாளிகைக்குட் புகுந்தார்.

(நாளை முடிவடையும்)

# காவிரிப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு

## பிரதமர் மன்மோகன் சிங் உத்தரவாதம்

(புதுடில்லி)

காவிரிப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் வகையில், நியாயமான தீர்வொன்று காணப்படுமென்று பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்



திருக்கிறார்.

புதுடில்லியில் தம்மைச் சந்தித்த தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இந்த உறுதியைப் பிரதமர் அளித்ததாகப் பிரதமர் அலுவலகச் செய்திக் குறிப்புத் தெரிவிக்கிறது.

இந்த ஆண்டு பருவ மழை முன் கூட்டியே தொடங்கியுள்ளதாலும், வழக்கமாகப் பெய்யும் பருவ மழையைக் காட்டிலும் இந்த ஆண்டு பருவ மழை கூடுதலாகப் பெய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதாலும், இந்த ஆண்டு தண்ணீர் பற்றாக் குறையை எதிர்கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

காவிரிப் பிரச்சினையை கர்நாடகம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுடன் முன்னுரிமை அடிப்படையில் விவாதித்து வருவதாகவும், அனைத்துத் தரப்பினர்களது கருத்துக்களையும் கேட்டறிந்து அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் நியாயமான தீர்வு காணப்படுமென்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

அன்னைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் உரிய தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியம் பற்றிக் குறிப்பிட்ட பிரதமர், ஒரு குறிப்பிட்ட பகுதி இதனால் அதிகமாகப் பாதிக்கப்படக் கூடாது என்றும், தண்ணீர் பற்றாக் குறைக் காலங்களில் ஏற்படும் சிரமத்தை அனைவரும் சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.

முன்னதாக காவிரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி தமிழகத்துக்கு உரிய தண்ணீரைக் கர்நாடகம் உடனடியாகத் திறந்து விட, பிரதமர் மன்மோகன் சிங் உத்தரவிட வேண்டுமென்று தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினார்கள்.

புதுடில்லியில் இது சம்பந்தமாகப் பிரதமரிடம் மனுவொன்றை அளித்த அவர்கள், இந்த விடயத்தில் பிரதமர் உடனடியாகத் தலையிடவேண்டுமென்று வற்புறுத்தியுள்ளனர்.

காவிரி நடுவர் மன்றம் 1991 ஆம் ஆண்டு அளித்த இடைக் காலத் தீர்ப்பைக் கர்நாடகம் ஓராண்டு கூட முழுமையாக நிறைவேற்றவில்லையென்றும், கடந்த சில ஆண்டுகளாகக் கர்நாடகம் தமிழகத்துக்குத் தண்ணீரைவிடவில்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு பிரதமரிடம் சமர்ப்பித்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கர்நாடகம் தண்ணீர் திறந்து விடாததால் காவிரி டெல்டா பகுதியில் வேளாண் நடவடிக்கைகள் முற்றிலும் தடைப்பட்டதோடு, டெல்டா மாவட்டங்களில் விளைச்சல் பாதிக்கப்பட்டு விவசாயிகள் சொல்லொணாப் பாதிப்புக்களை அடைந்துள்ளதாக அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வழக்கமாகக் குறுவைச் சாகுபடிக்கு ஜூன் மாதம் 12ஆம் திகதி மேட்டூர் அணை திறக்கப்படுவது வழக்கம். ஆனால் காவிரி நடுவர் மன்ற உத்தரவுப்படி கர்நாடகம் தண்ணீர் விடாததால், இந்த ஆண்டும் குறுவைச் சாகுபடிக்கு இம் மாதம் 12ஆம் திகதி தண்ணீர் திறந்து விடுவது கிட்டத்தட்ட முடியாத காரியமாக உள்ளது என்று அம் மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவில் ப.சிதம்பரம், மணிசங்கர ஐயர், ரி.ஆர்.பாலு, தயாநிதிமாறன், ஏ.ராஜா உள்ளிட்ட தமிழகத்தைச் சேர்ந்த 12 அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

சமீப காலங்களில் தமிழகத்தைச் சேர்ந்த தி.மு.க., அ.தி.மு.க., உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரைக் கூட்டாகச் சந்தித்து தண்ணீர் திறந்து விட வற்புறுத்தியிருப்பது குறிப்பிடத் தக்கது.

இந்தச் சந்திப்பின் பின்னர் மத்திய அமைச்சர் மணிசங்கர ஐயர் மற்றும் தி.மு.க.வின் மூத்த தலைவர்களில் ஒருவரான துரை முருகன் ஆகியோர் செய்தியாளர்களிடம் பேசினார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை மிகவும் கவனமாகக கேட்டறிந்த பிரதமர், காவிரி நீரில்லாமல் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்குத் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதாகக் கூறினார்.


கடந்த காலத்தைப் போலில்லாமல் காவிரி நதி நீர் ஆணையத்தின் தலைவரான பிரதமர் மன்மோகன் சிங் இப்போது இந்தப் பிரச்சினைக்கு உரிய முக்கியத்துவம் அளித்து நடவடிக்கையெடுப்பார் என்றும் மணிசங்கர ஐயர் கூறினார்.

குறுவைச் சாபடிக்குத் தண்ணீர் அவசியமாகத் தேவைப்படுவதால், இந்தப் பிரச்சினையில் பிரதமர் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டுமென்று துரை முருகன் கூறினார்.(து)



கடந்த திங்கட்கிழமை நடந்த நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்ற குடியரசுத் தலைவர் அப்துல் கலாமை அழைத்துச் செல்லும் பிரதமர் மன்மோகன் சிங், நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத், மக்கள வைத் தலைவர் சோமநாத் சட்டர்ஜி குடியரசுத் துணைத் தலைவர் ஷெகாத்.

**இந்தியச் செய்திகள்**



# உறுப்பினர்களது ஆர்ப்பாட்டத்தால் மக்களவை ஒத்திவைக்கப்பட்டது

(புதுடில்லி)

குற்ற வழக்குகளுடன் தொடர்புடையவர்களை அமைச்சர்களாக நியமித்தது சம்பந்தமான பிரச்சினையில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் நேற்று முன்தினம் முழுமையாக ஒத்திவைக்கப்பட்டன.

இப்பிரச்சினையில் மக்களவையின் எதிர்க்கட்சியினர் அமளியில் ஈடுபட்டதையடுத்து அவை பி.ப. 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை அவை கூடிய சொற்ப நேரத்துக்குள் இந்தப் பிரச்சினை பற்றிப் பேசத் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அமைப்பாளர் ஜோர்ஜ் பெர்னாண்டஸுக்குச் சபாநாயகர் சோமநாத் சட்டர்ஜி அனுமதியளித்தார்.

பெர்னாண்டஸ் இது குறித்தப் பேச எழுந்ததும் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து தேசிய ஜனநாயகக் கூட்டணி உறுப்பினர்கள் அவையின் மையப் பகுதிக்குச் சென்று கோஷம் எழுப்பினார்கள்.

இந்தக் கூச்சல், குழப்பங்களுக்கிடையே காங்கிரஸ் உறுப்பினர் பவன்குமார் வன்ஸா, குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

அப்போதும் குற்ற வழக்குத் தொடர்புடைய அமைச்சர்களை நீக்க வேண்டுமென்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையின் மையப் பகுதியிலிருந்து கோஷம் எழுப்பினார்கள்.

உறுப்பினர்களை இருக்கைக்குச் செல்லுமாறு சபாநாயகர் சோமநாத் சட்டர்ஜி கேட்டுக் கொணடார்.

இருபபினும் அவையில் அமைதி ஏற்படாததையடுத்து அவையைப் பி.ப. 2மணி வரை ஒத்திவைப்பதாக அறிவித்தார்.

பற்பகல் அவை மீண்டும் கூடிய போது, நிலைமையில் எந்தவிதமான மாற்றமும் இல்லாததால் அவை நேற்றுமுன் தினம் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது. (து)

# 122 ஆண்டுகளின் பின் ஏற்பட்ட அபூர்வ நிகழ்ச்சி


(சென்னை)

சுமார் 122 ஆண்டுகளுக்குப் பிறகு விண்ணில் சூரியனை நீலச் சிறப்புடன் வெள்ளிக் கோள் கடந்து சென்ற அபூர்வ நிகழ்ச்சி, நேற்ற முன்தினம் நடைபெற்றது.

சூரியனை வெள்ளிக் கோள் அவ்வவ்போது கடந்து சென்றாலும் பூமி, வெள்ளி, சூரியன் ஆகியவை ஒரே நேர்கோட்டில் உள்ள போதும் வெள்ளிக் கோள் சூரியன் மீது வெறும் புள்ளி போல் தோன்றும்,

இந்தியாவில் நேற்று முன் தினம் காலை 11 மணிக்குத் தொடங்கய இந்த அரிய நிகழ்வை மாலை 4.30 மணிவரையில் தெளிவாகக் காணமுடிந்தது.

சூரியனை வெள்ளிக் கிரகம் கடக்கும் அபூர்வ காட்சியைக் காணச் சென்னையிலுள்ள பிர்லா கோளரங்கத்தில் மாணவ, மாணவியர் வந்து குவிந்துள்ளனர். (து)



காயதே மில்லத்தின் 109ஆவது பிறந்த தினத்தையொட்டி அவரது நினைவிடத்தில் தமிழக அமைச்சர்கள் பொன்னையன்; நிதி மற்றும் உணவுத்துறை அமைச்சர் அன்பழகன் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

# தமிழகத்துக்குக் காவிரி நீர் இல்லை

## கர்நாடக அரசு வழமைபோல் கைவிரிப்பு

(பெங்களூர்)

தமிழகத்துக்கு உடனடியாகக் காவிரி நீரை விடுவிக்க வாய்ப்பு இல்லையென்று கர்நாடகம் கூறியிருக்கிறது.

நேற்று முன்தினம பெங்களூரில செய்தியாளர்களிடம் பேசிய கர்நாடக அமைச்சர் பீ.ஜி.ஆர். சிந்தியா இது சம்பந்தமாகப் பிரதமரிடமிருந்து வேண்டுகோள் எதுவும் வரவில்லையென்று தெரிவித்தார்.

காவிரி நீர் தொடர்பாகப் பேச் ரி.ஆர்.பாலு தலைமையில் தமிழக பிரதிநிதிகள் பெங்களூர் வரவிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

தமிழகப் பிரதிநிதிகள் குழு, முதலமைச்சர் தரண் சிங், துணை முதலமைச்சர் சித்தாராமையா ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கர்நாடக விவசாயிகளும் தண்ணீர் இல்லாமல் அவலப்படுவதால் தமிழகத்துக்குத் தண்ணீர் விடுவிக்கும் கேள்வியே எழ

காவிரிப் பிரச்சினையில் கர்நாடக மாநிலத்தின் கருத்துக்களைப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து எடுத்துக் கூற, அம் மாநில நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரமொதுக்குமாறு கேட்டுள்ளனர்.

கர்நாடக மாநிலத்தைச சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் புதுடில்லியில் மத்திய அமைச்சர் ஆர்கஸ் பெர்னாண்டஸ் அலுவலகத்தில் கூடி இந்த முடிவையெடுத்த

# கிளி. வைத்தியசாலையில் போர் நினைவுச் சின்னம்

(கிளிநொச்சி)

சிங்கள இனவாதத்தின் கொடூரத்தை வெளிப்படுத்தும்



வகையில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் போர் நினைவுச் சின்னம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மருத்துவ மனையின் வாசலில் அங்குவரும் சகலரதும் மனதில் பதியத்தக்கதாக இப்போர் நினைவுச் சின்னம் அமைக்கபபட்டுள்ளது.

சிங்கள இராணுவம் நிகழ்த்திய போரின் கொடுமையின் உச்ச வெளிப்பாடாகவே அமைதி தழுவ வேண்டிய மருத்துவமனையில் இந்த நினைவுச்சின்னம் அமைந்துள்ளது.

இராணுவ உருவங்கள், துப்பாக்கிகள், எறிகணைகள், எறிகணைச் செலுத்திகள் ஆகியவை இதில் உள்ளன. நான்கு முகங்களைக் கொண்ட ஒவ்வொரு பக்கமும் செவ்வக வடிவில் இந்த நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மருத்துவ மனையின் மீது எறிகணை வீசியும், வானூர்திகளிலிருந்து குண்டுகளை வீசியும் இறுதியில் ஆக்கிரமித்தும் மிக மோசமான கொடூரங்களை இராணுவம் புரிந்தது. இதன் வெளிப்பாடாகவே இந்த போர் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழர் தாயகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சிற்ப ஓவியக் கலைஞரால் கிளிநொச்சியில் உள்ள தனியார் நிறுவனத்தின் அனுசரணையில் இந்தப் போர் நினைவுச் சின்னம் அமைக்கப் பட்டுள்ளது.

வன்னியில் இதுவரை காலத்திலும் அமைக்கப்பட்ட போரின் கொடூரத்தை வெளிப்படுத்தும் முதல் நினைவுச் சின்னமாக இது அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (உ-121)




## அக்கரைப்பற்றில் பாடசாலையில் இருந்து விலகிய 610 மாணவர்கள் மீள இணைவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் உள்ள அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பாடசாலையில் இருந்து இடைவிலகிய மாணவர்களில் 610 பேர் மீண்டும் தம்மை பாடசாலைக் கல்வியில் இணைத்துக் கொண்டுள்ளனர்.

யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் பாடசாலைக் கல்வியில் தம்மை இணைத்துக் கொண்டுள்ள இவ் 610 பேரும் 18 வயதுக்கு கீழ்ப்பட்டோராவர்.

இவர்களுக்குரிய பாடசாலைச் சீருடைத் துணிகள் மற்றும் கற்றல் உபகரணங்களையும் உடனடியாகவே வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, பாடசாலைகளில் தம்மை மீள் இணைத்துக் கொண்ட மாணவர்களுடனான அணுகுமுறைகள் தொடர்பாக பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் விதத்தில் கருத்தரங்குகளும் மேற்படி கல்வி வலயத்தில் இடம் பெற்று வருகின்றன. (உ-4,61)

## சமய அறிவுப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

(வேலணை)

வேலணை பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு ஆலய அறநெறிப் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கிடையே நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விபரம் வருமாறு:

**மத்திய பிரிவு:**

முதலாம் இடம்: பா.சாம்பவி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி, இரண்டாம் இடம் : த.றஜீத்தா, வேலணை நடராசா வித்தியாலயம், மூன்றாம் இடம்: கு.நிசாந்தினி, வேலணை நடராசா வித்தியாலயம்.

**கீழ்ப் பிரிவு:**

முதலாம் இடம்: கு.லோஜினி, யாழ்.வேலணை நடராசா வித்தியாலயம், இரண்டாம் இடம் : பா.செந்தூர்ச்செல்வன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை, மூன்றாம் இடம்: க.சுபாஸ்திகா வேலணை நடராசா வித்தியாலயம்.

**பாலர் பிரிவு:**

முதலாம் இடம்: சி.சிவகுமார், இரண்டாம் இடம்: கு.கம்சிகா, மூன்றாம் இடம்: கு.கலாதரி. (உ-10)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாம வலயத்திற்குட்பட்ட யா/பன்னாலை சேர் கனகச்பை வித்தி, யா/வறுத்தலைவிளான் அ.மி.த.க. பாடசாலை, யா/வட்டு மேற்கு அ.மி.த.க. பாடசாலை, யா/வட்டு திருநாவுக்கரசு வித்தி, யா/ஏழாலை இசிதோர் றோ.க.த.க பாடசாலை ஆகியவற்றுக்கு அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரிய சேவையின் வகுப்பு 1,வகுப்பு 2:1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மாதிரிவிண்ணப்பப் படிவத்தினை வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன் உரிய முறைப் படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (உ)





யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட மேசைப் பந்தாட்ட சங்கம் யாழ். Y.M.C.A. நிலையத்தில் நேற்று நடாத்திய மேசைப் பந்தாட்ட பயிற்சிப்பட்டறையின் போது, ஜேர்மனியில் இருந்து வந்த பயிற்சியாளர்கள் பயிற்சி வழங்குவதைக் காண முடிகிறது.

படம்: ஐங்கரன்



யாழ்.துரையப்பா ஸ்ரேரியத்தில் நேற்று நடைபெற்ற யாழ்.மாவட்ட மட்ட உடற்பயிற்சியிப் போட்டியின் ஒரு காட்சி.

படம் : ஐங்கரன்

உலக சுற்றுச் சூழல் தினம் ஜூன் -05



World Environment Day- June-05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்

சமுத்திரத் தரைப்பரப்பில் 0.5 வீதத்துக்கும் குறைவான இடத்தையே முருகைக் கற்பாறைகள் எடுத்திருந்தாலும், கடல் வாழ் உயிரினங்களில் 90 வீதத்துக்கும் அதிகமான இனங்கள் இந்தப் பாறைகளிலேயே தங்கியுள்ளன.

## இன்று ஒரு தகவல்

# சோழர்காலத் தேர்தல்

எனது நண்பர் ஒருவர் ஒருநாள் என்னிடம் சொன்னார்."நல்லவேளை நாமெல்லாம் சோழர்காலத்தில் பிறக்காமல் தப்பித்தோம்" என்றார். "ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டேன்."அப்போது பிறந்திருந்தால் நம்மைப் போன்ற நபர்கள் தேர்தலில் நிற்கமுடியாது போயிருக்கும்" என்றார். "அப்படியா சொல்கிறீர்கள்?" என்றேன். "ஆம் சோழர்கால தேர்தல் விதிகளை நேற்றுத் தான் தெரிந்து கொண்டேன்" என்றார்."எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?" என்றேன். "ஒரு புத்தகம் பார்த்தேன் அதில் போட்டிருந்தது. செங்கல் பட்டு மாவட்டம் உத்திரமேரூர் கல்வெட்டுக்களில் இந்த விபரங்கள் உள்ளன" என்றார். அப்படியென்றால் சரி! விபரமாகக் கூறுங்கள்" என்றேன். அவரும் கூற ஆரம்பித்தார்.

ஒருவர் தேர்தலில் வேட்பாளராக நிற்க வேண்டுமானால் அவருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் என்னென்ன? இருக்கக் கூடாத தகுதிகள் என்னென்ன? என்ற விபரங்கள் எல்லாம் அந்தக் கல்வெட்டில் உள்ளது. முதலில் தேர்தலில் நிற்க விரும்புகிறவருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் என்னவென்று பார்ப்போம்.

முதல் தகுதி அவர் வரி செலுத்தப்படும் நிலத்தின் உரிமையாளராக இருக்க வேண்டும். இரண்டாவது தகுதி அவருக்குத் தனது நிலத்தில் கட்டப்பட்ட சொந்த வீடு இருக்க வேண்டும். மூன்றாவது தகுதி அவருக்கு வயது முப்பதிற்கு மேல் அறுபதிற்குள்ளேயும் இருக்க வேண்டும். நான்காவது தகுதி தூய்மையான நெறியும் வாய்மையும் உள்ளவராக இருக்க வேண்டும். இந்தத் தகுதிகள் எல்லாம் உள்ள ஒருவர் தான் தேர்தலில் நிற்கமுடியும்.

சரி எப்படிப்பட்டோரெல்லாம் தேர்தலில் நிற்க முடியாது என்ற விபரமும் உத்திரமேரூர் கல்வெட்டில் உள்ளது. அவர் எந்தவொரு வாரியத்திலும் கடந்த மூன்று ஆண்டுகளாக அங்கத்தவராக இருக்க முடியாது. ஊழல் வன்முறை தீமைச் செயல்களில் ஈடுபட்டிருக்கக் கூடாது. " என் தங்கச்சி மகன்தானே தவறு செய்தான். அதற்கு நான் என்ன செய்வது?" என்று கேட்டுக் கொண்டிருக்க முடியாது.

தமது பாவங்களுக்குப் பிராயச்சித்தம் செய்திருந்தாலும் கூட அவர்கள் வேட்பாளர்களாகவோ இருப்பதற்கு அருகதை இல்லை. ஒரு தடவை தவறிழைத்தால் சரி. அதன்பின் அதற்கு என்னதான் பரிகாரம் செய்தாலும் அவர் தேர்தலிலும் நிற்க முடியாது ஓட்டும் போட முடியாது. இந்த விதிமுறைகள் எல்லாம் இப்போது இருந்தால் நானோ எனது நண்பனோ தேர்தலின் அருகே கூட நெருங்க முடியாது. ஒதுங்கிப் போக வேண்டியது தான்.

இருந்தாலும் அப்படிப்பட்டவர்கள் பொது வாழ்க்கைக்கு வந்தால் தான் எவ்வளவு நன்றாக இருக்கும். அதையும் கொஞ்சம் கற்பனை செய்து பாருங்களேன். சரி அந்தக் கற்பனையிலிருந்து இப்போது உள்ள நடைமுறைக்கு வருவோம்.

ஒரு தேசத்தில் இராணுவ ஆட்சி நடந்து கொண்டிருந்தது. மக்கள் குறை கூற ஆரம்பித்தார்கள்."நமது நாட்டில் ஆட்சியில் ஜனநாயகமில்லை" என்றார்கள். இது இராணுவத் தலைவரின் காதிலும் விழுந்தது.

அவர் உடனே என்ன செய்தார் என்றால் வெளி உலகைத் திருப்தி செய்வதற்காக ஒரு தேர்தல் நடத்தினார். வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றி இராணுவ வீரர்களே வாக்குச் சீட்டுகளில் முத்திரை குத்திப் போட்டனர். வாக்கு எண்ணிக்கை நடந்தது. பார்த்தால் எல்லா வாக்கும் அவருக்கே விழுந்திருந்தது. இடையில் ஒரு வாக்கு எதிர்க்கட்சிக்கு விழுந்திருந்தது. உடனே இராணுவத் தலைவர் பத்திரிகையாளரைப் பார்த்துச் சொன்னார். "பார்த்தீர்களா? எனது ஆட்சியில் ஜனநாயகம் இல்லை என்கிறீர்களே? பாருங்கள். எதிர்க்கட்சிக்கு ஒரு வாக்கு விழுந்திருக்கிறது" என்றார் முகமலர்ச்சியுடன்.

வாக்கு எண்ணிக்கை தொடர்ந்தும் நடந்து கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்தில் இன்னொரு வாக்கும் எதிர்க்கட்சிக்கு விழுந்தது. இதைப்பார்த்ததும் அந்த இராணுவ அதிகாரியின் முகத்தில் கோபம்."திருட்டுப் பயல். ஒருவனே இரண்டு வாக்குகள் போட்டிருக்கிறான்" என்று கூறிக்கொண்டே எழுந்து போய்விட்டார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# இலங்கை அரசின் கபடத்தனம் உலக நாடுகளுக்குப் புரிந்துவிட்டது

## யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப் பெறுப்பாளர்

(காரைநகர்)

இலங்கை அரசின் மீது நம்பிக்கை இழந்ததினாலேயே சர்வதேச நாடுகள் தமது உதவிகளை நிறுத்தியுள்ளன இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் அண்மையில் இடம்பெற்ற காரைநகர் விளானை சனசமூக நிலையத்தின் 21வது வருடாந்த நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

விளானை சனசமூக தலைவர் மு.சு. கந்தையா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் தமிழீழ தேசியக் கொடியை சிறப்பு விருந்தினரான யாழ். மாவட்ட அரசியல் துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் யோ.கலைவிழி ஏற்றிவைத்தார்.

கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட ஊர்காவற்றுறைப் பிரதேச சபைச் செயலாளர் கு. கணேசலிங்கம், பிரதி உள்நாட்டு உதவி ஆணையாளர் க. இராசையா ஆகியோர் மங்கள விளக்கினை ஏற்றி வைத்தனர்.

செம்மணன் அங்கு தொடர்ந்தும் உரையாற்றும் போது,

அரசியல் நிலைமையைப் பொறுத்தமட்டில் தென்னிலங்கை அரசியல் ஒரு நிலையில்லாத தளம்பல் தன்மையில் உள்ளது ஆனால் கடந்த பொதுத் தேர்தல் மூலம் நாம் அரசியல் பலம் வாய்ந்தவர்கள் என்பதை உலகறியச் செய்துள்ளோம்.

அத்துடன்,இராணுவ பலமும் அரசியல் பலமும் இணைந்து பலம் வாய்ந்த சகத்தியாக நாம் உள்ளோம். இந்நிலையில், ஸ்திரமற்ற அரசியலை நடாத்தும் அரசு சமாதான சூழலைப் பயன்படுத்தி எமது பலத்தை உடைக்கும் நோக்கோடு செயற்படுகின்றது.

அரசானது ஒரு பக்கம் சமாதானத்தில் அக்கறை கொண்டதாயும் மறுபக்கம் யுத்தத்திற்கு தயாராகியும் இன்னொருபக்கம் எம்மை சண்டைக்கு வலிந்து இழுக்கும் செயற்பாட்டையும் மேற்கொண்டு வருகின்றது.

ஆனால் எமது தலைவர் மிகவும் தெளிவான நிலையில் எம்மை வழி நடத்துகின்றார். எமது தலைவர் எமது தமிழ் மக்களின் விடிவுக்காய் சிந்திததுப் பொறுமையுடன் சமாதான வழியில் செல்கிறார். இதனால் எம்மை ஒரு பலம் வாய்ந்த சகதியாக சர்வதேச சமூகம் நோக்கி எமது சமாதான முயற்சிக்கு ஆதரவளிக்கின்றது.

இந்நிலையிலேயே அரசின் கபடத்தன்மைக்கு எச்சிரிக்கையாக சர்வதேச நாடுகள் தமது நிதி உதவிகளை நிறுத்தியுள்ளன.

எமது 16ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகளையும 75ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்களையும் பல கோடி ரூபா சொத்துக்களையும் இழந்து அடைந்த வெற்றியுடன் எமது விடுதலையை விரைவுபடுத்த நாம் அனைவரும் ஒன்றுபட்ட குரலோடு தலைவன் வழியில் வீறுநடை போட வேண்டும் எனத் தெரிவித்தார். (உ-246)

# தென் தமிழீழ நீதிமன்ற செயற்பாடுகள் ஆரம்பம்

(மட்டக்களப்பு)

தமிழழ நீதி நிர்வாகத்துறையின் மட்டு. அம்பாறை மாவட்டங்களின் தமிழீழ நீதிமன்ற நடவடிக்கைகள் இனறு பட்டிப்பளையில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அண்மையில் மட்டு. அம்பாறை மாவட்டங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையைத் தொடர்ந்து நீதிமன்ற நடவடிக்கைகள் தற்காலிகமாக கைவிடப்பட்டன.

மக்களின் குடியியல் பிணக்குகளும் குற்றவியல் பிணக்குகளும் தீர்க்கப்பட வேண்டும் என்பதிலும் தமிழீழ தேசத்தில் சட்டமும் ஒழுங்கும் சரியான முறையில் கடைப்பிடிக்கப்பட்டு உலக சமுதாயத்திற்கு முன்னுதாரணமான முறையில் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென தேசியத் தலைமை அக்கறை கொண்டு மீண்டும் இது ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே இந்நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த வழக்குகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் உரியவர்கள நீதிமன்றப் பதிவாளருடன் தொடர்பு கொள்ளுமாறு மட்டு. அம்பாறை தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (உ)

## இராசி பலன்

**10.06.2004**

**(வைகாசி 28, வியாழக்கிழமை)**
**அட்டமி மு.இ.7.11 வரை**
**பூரட்டாதி மு.இ.9.40வரை**
**இராகுகாலம் 1.22-2.52 மணிவரை**
**சுபநேரம் 7.22-8.52 மணிவரை**
**அட்டமி, நவமி**

**மேடம்**
சோம்பல் நிலை, தொழில் கஷ்டம், எடுத்த கருமங்கள் கைகூடும், பிறருக்கு உதவி செய்தல்.

**இடபம்**
குடும்ப மகிழ்ச்சி, தனதானிய சேர்க்கை, காரிய சித்தி, நண்பர்கள் சந்திப்பு.

**மிதுனம்**
ஆரோக்கியம், நன்கொடை, பரபுத்தனம், பிறர் உதவி.

**கடகம்**
தேசாந்திரம் வாசம், பொருள் விரயம், பயந்த சுபாவம், தொழில் முயற்சி.

**சிங்கம்**
கலகம், மனக்கிலேசம், காரிய தடங்கல், பிரயாண பயம்.

**கன்னி**
மனோ சௌக்கியம், பெருமையடைதல், காரிய அனுகூலம், நிலைமாற்றம்.

**துலாம்**
ஜனவசியம், போசன சுகம், காரிய சித்தி, புதிய விடயம்.

**விருச்சிகம்**
அஜீரண ரோகம், அபகீர்த்தி, முயற்சி தாமதம், கௌரவக்குறைவு.

**தனுசு**
மனச்சஞ்சலம், தனவிரயம், தொழிலில் ஆர்வம், உறவினர் சந்திப்பு.

**மகரம்**
மனோ தைரியம், மாதர் நட்பு, நல்ல செய்தி ,தொழில் விருத்தி.

**கும்பம்**
போசன சுகக்குறைவு, எடுத்த கருமங்கள் தாமதமாகும், கௌரவக்குறைவு, திடீர் நன்மை.

**மீனம்**
வெகுமானம், சயன சுகம், சகோதரர் உதவி, முயற்சி கைகூடும்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

*வளவன்*

# புலிகளின் கோரிக்கையை படையினர் நிராகரித்தனர்

(மட்டக்களப்பு)

மடடக்களப்பில் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்திருந்த வேண்டுகோளை படைத்துறை நிராகரித்துள்ளது.

மட்டக்களப்பில் தொடர்ச்சியாக தாக்குதல்களை மேற்கொண்டு வரும் குழுக்களைக் கைது செய்யும் பொருட்டே, விடுதலைப் புலிகள் இக்கோரிக்கையை விடுத்திருந்தனர்.

படையினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த வாரம் வவுணதீவில் நடைபெற்ற உயர்மட்டச் சந்திப்பின் போது தமிழீழ விடுதலைப புலிகள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் நடமாடுவது போர் நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயலாக அமையும் என்பதால் அவர்களின் இக்கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் நிராகரித்து விட்டதாக படைத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(உ)

## யாழ். மாவட்டத்தில்

# 108 சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா நுகர்வுக் கடன்

(காரைநகர்)

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் நலன் கருதி சமுர்த்தி அதிகார சபையினால் 50 ஆயிரம ரூபா நுகர்வுக் கடன்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இக் கடன் திட்டம் தொடர்பாக சகல பிரதேச செயலங்களிற்கும் வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அகில இலங்கை ரீதியாக 4 ஆயிரம் சமுர்த்தி உத்தியோகத்தர்களை உள்ளடக்கும் இத்திட்டத்தில் யாழ். மாவட்டத்தில் 108 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளடக்கப்படவுள்ளனர்.

இந்த 5வருட தவணைக்கால இலகு முறைக் கடன் திட்டத்தில் யாழ்.மாவட்டச் செயலகத்தில் 2பேர், நெடுந்தீவு 3 பேர், ஊர்காவற்றுறை 5 பேர், காரைநகர் 2பேர்,வேலணை 6பேர், யாழ்ப்பாணம் 5பேர், நல்லூர் 8பேர், சாவகச்சேரி 12பேர், மருதங்கேணி 5பேர், பருத்தித்துறை 12பேர், கரவெட்டி 13பேர், கோப்பாய் 7பேர், தெல்லிப்பளை 8பேர், உடுவில 7பேர், சண்டிலிப்பாய் 7 பேர்,சங்கானை 6 பேர் என்ற அடிப்படையில் பயன்பெறவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-246)

இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடை தெரிந்து நன்மையவர் - குறள்

வலம்புரி

## வாக்களித்த மக்களே பார்த்தீர்களா உங்கள் தெரிவை

மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி என்பது நம் மூதாதையர் மொழி. அனுபவத்தின் பிழிவாகக் கூறப்பட்ட மேற்போந்த கூற்றின் நிதர்சனம், வரலாறுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த உண்மை மன்னனுக்கும், மக்களுக்கும் இடைப்பட்டது மட்டுமல்ல. ஆசிரியருக்கும்-மாணவருக்கும், மருத்துவருக்கும்-நோயாளிக்கும், நீதிபதிக்கும்-நீதிக்குமிடையே பொருத்துடையதாகும்.

மன்னன் நீதிவழுவாத ஆட்சி செய்வானேயாயின் மக்களும் நீதிதவறாது நடந்து கொள்வார்கள். அதேபோல் ஆசிரியர்கள் தமது பணியை சிறப்பாகச் செய்வார்களேயாயின் முதற்தர மாணவர்களை உருவாக்க முடியும் இதுவே உண்மை.

அவ்வகையில், இப்போது நாட்டில் மன்னராட்சி முறை மறைந்து மக்கள் ஆட்சி என்ற பெயரில் ஜனநாயக ஆட்சி தோற்றம் பெற்றுள்ளது. மக்களுக்காக மக்களால் தெரிவு செயயப்பட்ட ஜனநாயக ஆட்ச இப்போது தனது வரைவிலக்கணத்தை இழந்து புதிய வடிவத்தைப் பெற்றுள்ளது. இதற்கு இலங்கைப் பாராளுமன்றம் நல்லதோர் உதாரணமாகும்.

இலங்கைப் பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொள்கின்ற முறை வெட்கித் தலைகுனிய வைக்கின்றது. மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி என்ற முதுமொழியில் சிறு திருத்தம் செய்தால் நாடாளுமன்றம் எவ்வழியோ அவ்வழியே மக்கள் என்று கூறிக் கொள்ளலாம். அதுவே இற்றைக்கால ஜனநாய ஆட்சிக்குப் பொருத்துடையதாகும். அவ்வகையில் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றார்களோ அதே போன்றுதான் மக்களும் நடந்து கொள்வார்கள் என்பது சகலரும் உணர்ந்து கொள்ள முடியும். ஒரு காலத்தில் இலங்கைப் பாராளுமன்றத்தில் நடைபெறும் கூட்ட அமர்வுகளை ஒளிபரப்புவது தடைசெய்யப்பட்டிருந்தது. இதனால் பாராளுமன்றத்தில் நடைபெறுகின்ற சிறுகுழப்பங்கள், துஷ்பிரயோகங்கள் என்பன வெறும் செய்தி வடிவில் வெளிவந்தன.

அவ்வாறு செய்தி வடிவில் வெளிவருகின்ற போது வார்த்தை வடிவங்களும் ஒழுங்குபடுத்தப்பட்டு நாகரிகமான முறையிலேயே வெளியிடப்பட்டது. இதனால் பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் முறைகேடாக நடந்து கொள்வதன் வடிவங்கள் பொது மக்களைச் சென்றடையவில்லை.

ஆனால் இப்போது பாராளுமன்றக் கூட்ட நிகழ்வுகள் நேரடியாக ஒளிபரப்பப்படுகின்றன. இதன் காரணமாக பாராளுமன்றத்தில் உறுப்பினர்களின் ஒவ்வொரு அசைவையும் உலக மக்கள் அனைவரும் நேரடியாக அவதானிக்க முடிகின்றது. இதனால் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் நடந்து கொள்கின்ற முறைகள்-வார்த்தைப் பிரயோகங்கள்-கைகலப்பு-காடைத்தனம் இவையாவற்றையும் நேரடியாகப் பார்க்க முடிகின்றது. இதனைப் பொது மக்கள் பார்க்கின்றபோது பாராளுமன்றத்தில் நடைபெறுகின்ற கைகலப்புக்கள், கைகலப்பை நியாயப்படுத்துவதாக அமைகின்றது.

குறிப்பாக பாராளுமன்ற நிகழ்வுகளை மாணவர்கள் பார்வையிடுவதால் அவர்களின் நடத்தையில் பாரிய பின்னடைவு மாற்றங்கள் ஏற்படப் போவது உறுதி. பாராளுமன்ற உறுப்பினர்களே இவ்விதம் நடந்து கொண்டால் நாம் மட்டும் அவ்வாறு நடப்பதில் என்ன தவறு என்ற கேள்வியை மாணவர்கள் தமக்குள் எழுப்பிக் கொள்வர். இதனால் எதிர் காலத்தில் சமூக, கலாசார மட்டங்களில் பெரியதொரு விலகல் நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

மதகுருமார் எனப் போற்றப்படுபவர்களே அரசியலில் குதித்துப் பாராளுமன்றம் சென்று அநாகரிகமாக நடந்து கொள்கின்றனரெனில், இவர்கள் எவ்வாறு மக்களை வழிப்படுத்தப் போகின்றார்கள். பொதுவாக பாடசாலை நிகழ்வுகள் மற்றும் பொது நிகழ்வுகளில் பிரதம விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களை அழைப்பது ஓர் சம்பிரதாய நிகழ்வாக இருந்து வருகின்ற வேளையில், அவ்வாறு ஓர் பாடசாலை நிகழ்வில் கலந்து கொள்ளும் பாராளுமன்ற உறுப்பினர் மாணவர்களைப் பார்த்து ஒற்றுமையாக இருங்கள், நல்லவற்றைப் பேசுங்கள் என்று கூற முடியுமா? அவ்வாறு கூறினால் அங்கிருக்கின்ற மாணவர்கள் எழுந்து ஐயா, இதனை நீங்கள் முதலில் செய்து காட்டுங்கள் எனக் கூறமாட்டார்களா? எப்படியிருக்கின்றது பொது மக்கள் புள்ளடிபோட்டு பாராளுமன்றம் அனுப்பிவைத்த மக்கள் பிரதிநிதிகளின் ஒழுங்கு? ஆம் இவையாவும் பாராளுமன்றத்தில் காடைத் தனம் செய்த உறுப்பினர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

# போக்குவரத்து நடைமுறைகள் கடுமையான வகையில் அமுல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 15ஆம் திகதிக்குப் பின், சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்துதல், தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளைச் செலுத்துதல் அல்லது பிரயாணம் செய்தல், வழி அனுமதிப் பத்திரம் பெறாத வாகனங்கள் சேவையில் ஈடுபடுதல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளனர்.

யாழ்மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தப் பத்திரிகை அறிக்கையின் முழு விபரம் வருமாறு,

தற்போது யாழ். மாவட்டத்தில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களும், அதனால் பொது மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளும் சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனங்கள் செலுத்துதல், தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிள் செலுத்துதல், உரிய முறையில் பின்னுக்கு அமர்ந்து பிரயாணம் செய்யாமை போன்றவை காரணமாகவுள்ளது. அத்துடன் பயணிகள் சேவை வழியனுமதிப் பத்திரம் பெறாத தனியார் வாகனங்கள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இவை நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு முரணானவை. இதுவிடயமாக 2004.06.01 ஆம் திகதி மாவட்டச் செயலகத்தில் சம்பந்தப்பட்ட சகலரும் கலந்து கொண்ட கூட்டத்தில் போக்குவரத்து சம்பந்தமான சட்டங்களை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டிற்கு முன் இம் மாவட்டத்தில் சட்ட ஒழுங்குகள் சீரான முறையில் பேணப்பட்டு வந்ததுடன் அதற்குப் பின்பு மாவட்டத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இவற்றை நடைமுறைப்படுத்த முடியாமலிருந்தது. ஆனாலும் போர்நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டு மாவட்டத்திலுள்ள நிலைமை சுமுகமாக மாறிக்கொண்டிருக்கின்ற காரணத்தினால் சட்டங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேலும் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு பின்னான காலத்தில் இம் மாவட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்திருப்பதுடன் மாவட்டத்தின் வீதிகள் இவற்றின் பாவனைக்கேற்ற வகையில் சீரமைக்கப்படாத ஒரு நிலைமை உள்ளது. இதனாலும் இம் மாவட்டத்தில் சட்ட ஒழுங்குகளை இறுக்கமாகப் பேண வேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டுள்ளது.

ஆகவே மேற்கூறிய காரணங்களைக் கருத்திற் கொண்டு சட்ட விதிகளுக்கு முரணாக வாகனங்களைச் செலுத்துதல் மற்றும் சட்ட முரணான செயல்பாடுகளில் ஈடுபடுதல் போன்றவற்றால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைக் குறைப்பதற்கு இந் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளதுடன் சகலரினதும் ஒத்துழைப்பையும் கோர வேண்டியுள்ளது.

மேலும் 1990ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் பிரிவு 25(1),27(1)இற்கு அமைய வாகனங்களுக்கு வருடாந்த வரி அனுமதிப் பத்திரம், வலுவிலுள்ள காப்புறுதிச் சான்றிதழ் ஆகியவற்றைப் பெற்றிருப்பதுடன் மேற்படி சட்டத்தின் பிரிவு 122 இற்கு அமைய கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலுத்தும் வாகன வகுப்புக்கு ஏற்ப சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

A.மோட்டார் கோச், B.மோட்டார் லொறி, A-1 பாரம் குறைந்த மோட்டார் கோச், B-1பாரம் குறைந்த மோட்டார் லொறி, C கார், C-1 இரட்டை நோக்கு வாகனம், D மோட்டார் சைக்கிள், E மோட்டார் முச்சக்கர வண்டி, F மோட்டார் முச்சக்கர வான், G உழவு இயந்திரம், G-1 பாரம் குறைந்த உழவு இயந்திரம் H சக்தியுறோருக்கானது.

அத்துடன் தற்போதைய புதிய பதிவு நடைமுறையின் கீழ் பதிவுசெய்யப்பட்டு ஆங்கில எழுத்துடன் ஆரம்பிக்கும் வாகன இலக்கங்களைக் கொண்ட வாகனங்களில் வாகன அடையாள அட்டை, ஸ்ரிக்கர் என்பன மேலதிகமாக இருத்தல் வேண்டும்.

பயணிகள் சேவையில் ஈடுபடும் தனியார் வாகனங்கள் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் 1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க சட்டத்தின் 24ஆம் பிரிவுக்கு அமைய வலுவிலுள்ள பயணிகள் சேவை வழி அனுமதிப் பத்திரம் பெற்றிருக்க வேண்டியதுடன் தகைமைச் சான்றிதழின் பிரதியையும், ஓட்டக் குறிப்புத்தாள் ஆகியவற்றையும் வைத்திருப்பதுடன் பயணிகள் சேவை வழி அனுமதிப் பத்திரத்துடன் வழங்கப்படும் லேபலை முன் கண்ணாடியில் தெரியக் கூடியவாறு ஒட்டியிருத்தல் வேண்டும்.

மேற்படி சட்ட நடைமுறைகள், யாவும் பொதுமக்களின் நன்மைக்காகவும், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் நடைமுறைப்படுத்தப்படுவதால் சகல தரப்பினரும் மேற்படி சட்ட ஒழுங்குகள், வீதி ஒழுங்கு விதிகளைப் பின்பற்றி செயற்படுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

# அரசின் அசமந்தப் போக்கை கண்டித்து அணி அணியாகத் திரள்வீர்

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

புதிய அரசாங்கத்தின் சமாதானம் தொடர்பான அசமந்தப் போக்கைக் கண்டித்தும் முக்கிய மூன்று கோரிக்கைகளை முன்வைத்தும் யாழ். குடாநாடு தழுவியதாக மேற்கொள்ளும் மாபெரும் கண்டனப் பேரணியில் அனைத்துப் பொது மக்களையும் கலந்து கொண்டு எமது உரிமைகளை, எமது எழுச்சிக்குரல்களை உலக சமூகத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் வெளிப்படுத்வேண்டுமென அழைக்கின்றோம்.

நாளை நடைபெறவிருக்கின்ற கண்டனப் பேரணி குறித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் மன்றம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும், இயல்பு வாழ்க்கை ஏற்படுத்துவதில் உள்ள தடைகளை நீக்குதல்,மீளக் குடியமர்த்தல்,கிழக்கில தமிழ்த் தேசியப்பற்றாளர்களின் படுகொலைகள் என்ற மூன்று முக்கிய விடயங்கள் தொடர்பாக அரசு கடைப்பிடித்துவரும் அசமந்தப்போககைக் கண்டிக்கும் முகமாக இந்த மாபெரும் பேரணி நடாத்தப்படவுள்ளது.

இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து இவ்வளவு காலத்திற்கும் மக்களின் இயல்பு வாழ்க்கை, இயல்பு நிலை எவையும் தோற்றுவிக்கப்படவில்லை

எமது மக்கள் நீண்ட காலமாக பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் சொந்த ஊரில், சொந்த வீடுகளில் வாழத் தகுதியற்றவாகளாக அரச படைகளின் ஆக்கிரமிப்புக் காரணமாக வாடகை வீடுகளில் வாழ்நாளைக் கழித்துக் கொண்டிருக்கும் அவலநிலை இன்று தொடர்ந்த வண்ணம் உள்ளது.

இந்த நிலையை நாம் தொடர்ந்தும் அனுமதிக்கக் கூடாது எமக்கு இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தவும் எமது மீள் குடியேற்றத்தினை உறுதிப்படுத்தவும் எமது மண்ணில் புத்திஜீவிகள், பத்திரிகையாளர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டிக்கவும் அலை அலையாக மக்கள் அனைவரும் எழுந்து எமது உணர்வுகளை வெளிப்படுத்துவோம்.

இனியும் வாடகை வாழ்க்கை வேண்டாம். எமது மண்ணில் தமிழ்ப் பற்றாளர்கள் மீது நடத்தப்படும் படுகொலை வெறியாட்டங்கள் வேண்டாம். எமது மண்ணில் சுதந்திரமாக, சுபீட்சமாக வாழ வழியமையுங்கள் என்று இலங்கை அரசாங்கத்தையும் உலக நாடுகளையும் வலியுறுத்தும் இந்த மாபெரும் கண்டனப் பேரணியில் அனைத்து மக்களும் பெரும அணி அணியாகக் கலந்துகொள்ள அழைக்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## சாயி அருள்முதம்



நிமிர்நது உட்கார்ந்து கொண்டு மௌனமாக இருப்பது மட்டும் தியானமாகாது. அசைவற்றிருப்பதும் தியானமாகாது. உங்கள் சகல எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் இறைவனுடன் ஒன்று சேர்ப்பதே தியானமாகும். இறைவனில் உள்ளம் கரைந்தாலன்றி தியானம் ஒருபோதும் வெற்றியளிக்காது.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# மெல்லக்கற்கும் மாணவர் மேம்பாட்டுக்கு 4.5 மில்லியன்

(மருதங்கேணி)

யாழ். மாவட்டத்தில் மெல்லக் கற்கும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக யுனிசெப் நிறுவனம் 4.5 மில்லியன் ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளது.

இந்நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் 2ஆயிரம் பாடசாலை மாணவர்களின் கல்வி அறிவை மேம்படுத்தும் நடவடிக்கைகள் முன் எடுக்கபபடவுள்ளன. முதற்கட்டாக 6ஆம் தர மாணவர்களிடையே பரீட்சை ஒன்று நடாத்தப்பட்டு அதிலிருந்தே மேற்குறிப்பிட்ட இரண்டாயிரம் மாணவாகளும் தெரிவு செய்யப்படுவர்.

அவ்வாறு தெரிவு செய்யப்படும் மெல்லக் கற்கும மாணவர்களுக்கு 7ஆம் தரத்தில் இருந்து விசேட கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அத்துடன் அவர்களுக்கு விசேட கைநூல்களும் வழங்கப்படவுள்ளன. (உ-35)

## வீடியோப் படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக திரைப்பட வட்டம் வழங்கிவரும் திரைப்படக்காட்சித் தொடரில் ஜானகி விஸ்வநாதன் இயக்கத்தில உருவான"கனவு மெய்ப்படவேண்டும்" எனும் திரைப்படம் எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் கலந்துகொண்டு பயன்பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## சீருடைத் துணியை விரைவில் பெறுக

(யாழ்ப்பாணம்)

பாடசாலைச் சீருடைத் துணிக்கு விண்ணப்பித்து இதுவரை அவற்றைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் தத்தமது கிராமசேவையாளர்களிடம் இம் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். பிரதேச செயலாளர் பா.செந்தில் நந்தனன் கேட்டுள்ளார். (ச)

## சிறுவர்கள் ஒப்படைப்பு

(திருகோணமலை)

சுய விருப்பின் பேரில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்த 13 சிறுவர்கள் மீளவும் அவர்களுடைய பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இணைந்த 13 பேரும் நேற்று முன்தினம் திருகோணமலை சம்பூரில் உள்ள அரசியல்துறையினரது செயலகத்தில் வைத்து அவர்களுடைய பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச)

## மிக்-27...

அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த வேளை மேற்படி விமானம் கட்டுப்பாட்டை இழந்துள்ளதுடன் விமானி தரையிறக்க எடுத்த முயற்சியும் பயனற்றுப் போனது.

இதேவேளை விமானி பரசூட் மூலம் பாய்ந்து உயிர் தப்பியுள்ளார். இவரை மீனவர்கள் காப்பாற்றியுள்ளனர்.

இந்த விமானத்தில் வேறெவரும் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது இவ்விதம் இருக்க இயந்திரக் கோளாறு காரணமாகவே விமானம் விபத்துக்குள்ளானதாகக் கூறப்படுகின்றது.

இந்த விமான விபத்துத் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக விமானப் பயிற்சிப் படைத் தளபதி ஜி.வி.புலசிங்க தலைமையிலான குழுவொன்றை விமானப் படைத் தளபதி நியமித்துள்ளார். விமானத்தின் கறுப்புப் பெட்டியை மீட்டுள்ள விமானப் படையினர் இது தொடர்பான விசாரணைகளுக்காக விமானத்தைத் தயாரித்த உக்கிரேன் நாட்டு நிறுவனத்தின் உதவியையும் பெற்றுக் கொள்ளவுள்ளனர். (உ-10)

## போராளியை..

ஆகியோர், நிலைமையை நேரில் அவதானித்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினரும் அங்கு சென்று இரு தரப்பினரையும் விசாரணை நடத்தியுள்ளனர். இதுகுறித்து போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவைத் தொடர்பு கொண்ட ஞானவேலு, அரசியல் வேலை திட்டங்களுக்காக வந்துள்ள போராளிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் இது போன்று இனி எந்த சம்பவமும் இடம் பெறாதிருக்க உறுதி தரப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தார். (ச-121)

## பாராளுமன்றத்துக்கு..

மான செயல்களில் ஈடுபடும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக சபாநாயகராகிய தாங்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது.

இதேவேளை இது தொடர்பான கடிதம் ஒன்று ஜனாதிபதிக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (உ-60,10)

## தமிழ்க் கூட்டமைப்பு...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெறும் நோக்குடன் கூட்டமைப்பு எம்.பிக்களுடனான சந்திப்புக்கு ஜனாதிபதி திடீர் அழைப்பு விடுத்துள்ளார்.

இன்று இரவு 8 மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் சந்திப்பு நடைபெறவிருக்கின்றது. இச் சந்திப்பில் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்கும்படி ஜனாதிபதி சந்திரிகா கோரும் பட்சத்தில சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் விடயம் தொடர்பான நிபந்தனைகளை கூட்டமைப்பினர் வலியுறுத்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

சமாதான முயற்சிகளையும் இடைநடுவில் கைவிட்டு, பாராளுமன்றத்திலும் பெரும்பான்மை இல்லாமல் பலபக்க அழுத்தத்திற்கு உள்ளாகியிருக்கும் ஜனாதிபதி கடைசி முயற்சியாக கூட்டமைப்பினருடனான சந்திப்புக்கு அழைப்பு விடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜாதிக ஹெல உறுமய, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றின் ஆதரவைத்திரட்டும் ஜனாதிபதியின் இராஜதந்திர நகர்வுகள் அனைத்தும் தோற்றுப் போன நிலையில், கடைசி முயற்சியாக கூட்டமைப்புடனான சந்திப்பை ஜனாதிபதி கையில் எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஜனாதிபதிக்கெதிரான குற்றப்பிரேரணையை பாராளுமன்றில் நிறைவேற்றுவதற்கு எதிர்க் கட்சிகள் இரகசியத் திட்டம் தீட்டி வரும் நிலையிலும் இந்த அதிரடிச் சந்திப்புக்கான அழைப்பை ஜனாதிபதி விடுத்திருக்கிறார்.

2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவது இதுவே முதற் தடவை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (த-ச)

## பிஸ்ரலுடன்...

என.

இச் சம்பவத்தையடுத்து அப்பகுதியைச் சோதனையிட்ட பொலிஸார் ரி.56 ரகத் துப்பாக்கி ரவை வைத்திருந்த அப்பிரதேச வாசி ஒருவரையும் கைது செய்தனர்.

இவர்கள் மூவரும் நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர். எதிர்வரும் 22ஆந் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ச)

**INFORMATION TECHNOLOGY PARK**
Kandy Road, Jaffna, Sri Lanka
Phone: Office: 021 222 3643 , 021 222 3641

**முக்கிய அறிவித்தல்**

தவிர்க்க முடியாத காரணங்களினால் எமது நிறுவனத்தின் கிளைகள் ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. கிளை நிறுவனங்களில் ஜூன் மாதத்திற்கான பிரிவுகளைத் தொடங்க முடியாதுள்ளதால் விண்ணப்பப் படிவங்களைப் பெற்ற மாணவர்கள் 14-06-04 இற்கு முன்னதாக தலைமையகத்துடன் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இதனால் ஏற்பட்ட சிரமங்களிற்கு வருந்துகின்றோம்.

சான்றிதழ் கற்கைநெறிகள் மற்றும் டிப்ளோமா கற்கைநெறிகள் யாவும் 12-06-04 இல் தலைமையகத்தில் ஆரம்பிக்க உள்ளது. மாணவர்கள் தங்கள் அனுமதியினை முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும்.

~நிர்வாகம்.

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## நிவாரணம்,புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் சிவப்பு நாட்டரிசி (புழுங்கல்) வழங்கலுக்கான கேள்வி கோரல்

(குறிப்பு-2004 ஏப்ரல், மே, யூன் மாதங்களுக்கான உலர் உணவு விநியோகத்திற்காக என்னால் 2004.06.01ம் திகதியன்று கோரப்பட்ட கேள்விகளில் 2004 ஏப்ரல் மாதத்திற்கான கேள்வி மாத்திரம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு 2004 மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கு இதன் கீழ்க்குறிப்பிடப்படும் கேள்வி கோரப்படுகின்றது.)

1. யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2004, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து கொள்வனவு செய்து கீழக்குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களுக்கென கீழ்த் தரப்பட்டுள்ள தொகை சிவப்பு நாட்டரிசியை நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் வழங்கீடு செய்யப்பட வேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை பின்னர் அறிவிக்கப்படும்.

| இல. | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | |
|---|---|---|---|
| | | மார்ச் 2004 MT | ஏப்ரல் 2004 MT |
| 1. | சாவகச்சேரி | 190 | 190 |
| 2. | கைதடி | 70 | 70 |
| 3. | கொடிகாமம் | 135 | 135 |
| 4. | உடுப்பிட்டி | 32 | 32 |
| 5. | கட்டைவேலி – நெல்லியடி | 45 | 45 |
| 6. | பருத்தித்துறை | 114 | 114 |
| 7. | புலோலி | 27 | 27 |
| 8. | மருதங்கேணி | 80 | 80 |
| 9. | யாழ்ப்பாணம் | 311 | 311 |
| 10. | நல்லூர் | 161 | 161 |
| 11 | அச்சுவேலி | 154 | 154 |
| 12. | நீர்வேலி | 115 | 115 |
| 13. | மானிப்பாய் | 131 | 131 |
| 14. | பண்டத்தரிப்பு | 90 | 90 |
| 15. | அளவெட்டி – மல்லாகம் | 64 | 64 |
| 16. | தெல்லிப்பளை | 150 | 150 |
| 17. | சங்கானை | 183 | 183 |
| 18. | சுன்னாகம் | 196 | 196 |
| 19. | புங்குடுதீவு – நயினாதீவு | 40 | 40 |
| 20. | வேலணை | 45 | 45 |
| 21. | ஊர்காவற்றுறை | 70 | 70 |
| 22. | காரைநகர் | 55 | 55 |
| 23. | தீவகம் | 12 | 12 |
| 24. | நெடுந்தீவு | 30 | 30 |
| | மொத்தம் | 2500 | 2500 |

2. கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா **500/-** யை யாழ்.மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2004.06.03 திகதி தொடக்கம் 2004.06.17 திகதி வரையிலான காலப் பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். இவ் வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களைப் பொறுத்த வரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.
3. மீளளிக்க முடியாத கேள்வி வைப்புக்களாக ரூபா**500/-**யை அந்தந்த மாவட்டச் செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடம் இருந்து கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
4. கேள்வி கோரப்படவுள்ள அரிசி சிவப்பு நாட்டரிசியாக(புழுங்கல்) இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.
5. பூரணப்படுத்திய இருகேள்விப் படிவங்களைத் தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். (அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீளத் தபால் உறையில் நேரடியாகவோ/ தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2004.06.18 பி.ப.2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப.3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமூகமளிக்க முடியும்.
6. கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடது பக்க மேல்மூலையில் ‘சிவப்பு நாட்டு புழுங்கல் அரிசி வழங்குவதற்கான கேள்வி’ என எழுதப்படல் வேண்டும்.
7. கேள்விகாரர்கள் **(Bidders)**குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களில் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளை சமர்ப்பிப்பதற்கும் அச் சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளைக் குறிப்பிடுவதற்கு அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் விநியோகிக்கப்பட வேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.
8. ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக் கூடிய வைப்பாக செயல்படுத்தல் முறிக்காக **(Performance Bond)**செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.
9. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணங்கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.
10. கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியில் இருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

**செ.பத்மநாதன்**
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விச் சபை/மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

08.06.2004

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.06.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.